கும்பேசுவரர் திருக்கோயிலும் மகாமகத் திருவிழாவும்



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

குடமூக்கே குடமுக்கே என்பீராகில்
கொடுவினைகள் தீர்த்தானைக் குறுகலாமே!

தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்!
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யுங்குட மூக்கிலே.

- திருநாவுக்கரசு நாயனார்.



அ அருள்மிகு ஆதிகும்பேசுவரர்

கும்பேசுவரர் திருக்கோயிலும் மகாமகத் திருவிழாவும்

புலவர் கோ. மு. முத்துசாமிபிள்ளை, (இ.ஆ.ப. ஓய்வு)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-192-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 151

திருவள்ளுவராண்டு 2023 மாசி-பிப்ரவரி 1992

நூல் : கும்பேசுவரர் திருக்கோயிலும் மகாமகத் திருவிழாவும்

ஆசிரியர் : புலவர் கோ. மு. முத்துசாமிபிள்ளை

பதிப்பு : முதற்பதிப்பு - 1992

மலிவு விலைப் பதிப்பு : உரு. 3-00

நூலகப் பதிப்பு : உரு. 10-00

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம் தஞ்சாவூர்

பொருளடக்கம்

எண்		பக்கம்
	அணிந்துரை	vii
	பதிப்புரை	xi
	முன்னுரை	xiii
1.	கும்பேசுவரர் திருக்கோயில்	1
2.	கும்பகோணத்தின் சிறப்பு	2
3.	பெயர் விளக்கம்	3
4.	கும்பேசுவரர்	4
5.	நவகன்னியர்	10
6.	மகாமகம்	13
7.	கும்பேசுவரரை வழிபட்டவர்கள்	18
8.	மூர்த்தங்கள்	23
9.	தீர்த்தங்கள்	28
10.	நவகன்னியர் அருச்சனை	32
11.	மகாமகத் தீர்த்தங்கள் அளிக்கும் பலன்கள்	33
12.	கோபுரங்கள்	35
13.	மண்டபங்கள்	36
14.	சிற்பங்களும் ஓவியங்களும்	36
15.	கல்வெட்டுகள்	39
16.	பூசைகளும் திருவிழாக்களும்	42
17.	இக்கோயிலில் சமயம், சமுதாயம், கலை, பண்பாடு முதலியவற்றினால் ஏற்பட்ட நன்மைகள்	44
18.	நிருவாகம்	46
19.	திருஞானசம்பந்தர் அருளிய திருக்குடமூக்குத் தேவாரப்பதிகங்கள்	47
20.	திருநாவுக்கரசு நாயனார் அருளிய திருக்குடமூக்குப் பதிகங்கள்	52
21.	காவிரி எங்கள் தாயும் தெய்வமும்	56
22.	கும்பகோணம் நகர்க் கோயில்கள்	58

அ அருள்மிகு மங்களாம்பிகா
(ஸ்ரீ மந்த்ரபீடேஸ்வரி)

முனைவர் சி.பாலசுப்பிரமணியன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

அணிந்துரை

ஒருபிடி படியும் சீறிடம் எழுகளிறு புரக்கும் சோழவளநாட்டின் ஒரு பகுதியாக விளங்குவது நன்செய் வளங்கொழிக்கும் தஞ்சை மாவட்டம். வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வளமிகு காவிரித்தாயருளால் நெற்களஞ்சியமாக விளங்குவது இம் மாவட்டம்.

தலைநிமிர் தோற்றந்தரும் பெரிய கோயிலும் கலைவளம் நிலை நாட்டும் சரசுவதிமகாலும் வளர்தமிழ் புகழ் போற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் நிலைபெறு புகழீட்டும் தஞ்சை நகரமே இம் மாவட்டத்தின் தலைநகரம்.

தலைநகரமாம் தஞ்சையின் கிழக்கே உள்ள திருத்தலம் கும்பகோணம். பண்டைக் காலத்தே திருக்குடமூக்கு என வழங்கப்பெற்ற இந்த நகரம், இன்று குடந்தை எனவும் கும்பகோணம் எனவும் வழங்கப்பெறுகிறது. காவிரியின் தென்புறத்தே கவினுற விளங்கும் இந்நகரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் சோழர் தலைநகராகவும் விளக்க முற்றிருந்தது. இங்கே சோழர் மாளிகையுண்டு; சோழர்காலத்துக் கோயில்களும் உண்டு. தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம் இது. ஆழ்வார்கள் அமுதிசை பொழிந்த அழகு பொன்னகரம் இது.

கும்பகோணத்துக் கோயிலில் குடிகொண்டு அடியவருக்கு அருள்பொழியும் கும்பேசுவரர் திருக்கோலக் காட்சி நல்கும் திருநாளே மகாமகத் திருவிழா. பொது மக்களால் மாமாங்கம் எனக் கூறப்படும் பெருவிழா.

ஐம்பெரும் பூதத்து இயற்கையை ஆய்ந்து தெளிவு பெற்றிருந்த பண்டைத் தமிழ் மாந்தர் வானியலிலும் வல்லுநர்களாய் விளங்கினர் என்பதற்கு ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

விண்வெளியில் வண்ண விளக்கேந்தி நிற்கும் பேரொளிகளைக் கண்டு அவற்றுள் 27 விண்மீன்களைத் தெளிந்து உணர்ந்து, அவற்றைப் பன்னிரண்டு இராசிகளில் அமைத்து ஒன்பது கிரகங்களையும் உருவுறக் கண்டுணர்ந்த அவர்களின் அறிவியல் ஆற்றல் வியத்தற்குரிய ஒன்றன்றோ?

சூரியனும் சந்திரனும் போன்று மதிப்பிடத்தக்க கிரகம் குரு. குரு ஒவ்வொரு இராசியிலும் ஒவ்வோர் ஆண்டாக பன்னிரண்டு இராசிகளில் சுற்றிவரப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

இவ்வாறு சுற்றிவரும்போது சந்திரனும் குருவும் ஒன்றுசேர்ந்து சூரியனது ஆட்சி வீடாகிய சிம்ம இராசியில் இருக்க, சிம்ம ராசிக்கு ஏழாவது வீடாகிய கும்பத்தில் சூரியன் இருந்து கொண்டு அங்கிருந்து தமக்கு ஏழாவது வீடாகிய சிம்மராசியில் குருவையும் சந்திரனையும் நேராகப் பார்க்கும் நாளே மகாமக நாளாகும். இந்நிலைமை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையே வரும். இந்த நல்லநாளில் கும்பகோணத்திலுள்ள மகாமகத் தீர்த்தங்கள் இருபதிலும் மூழ்கி எழுந்து கும்பேசுவரரை வழிபடின் பிணிகள் நீங்கும்; கவலைகள் தீரும்; கல்வியும் செல்வமும் கைகூடும்; வாழ்நாள் வளரும்; வானுலக வாழ்வு கிட்டும் என்பது மக்கள் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையின் விளைவே மகாமகத் திருவிழா. மகாமகத் திருவிழாவிலே நாற்பது இலட்சம் மக்கள் கூடுவார்கள்; தீர்த்தங்களிலே நீராடுவார்கள்; கும்பேசுவரரை வணங்கி நலம் பெறுவார்கள். தமிழக அரசின் சார்பில் புரட்சித்தலைவி மாண்புமிகு டாக்டர்

செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்த விழாவைச் சீர்படுத்திச் சேதமேதும் இன்றி நடத்துவதற்காக கோடிக்கணக்கில் செலவு செய்து விழாவில் பங்கு கொள்ளவரும் பக்தர்களுக்கு வேண்டும் வசதிகளையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் பேரருட் கொடையைத் தமிழகமே போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் பல்வேறு இடங்களிலிருந்து வருவோரனைவரும் பூவிரி காவிரி புனல் சுரந்தூட்டும் சோழ வளநாடு பற்றியும் அந்நாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சைமாவட்டம் பற்றியும் தலைநகராம் தஞ்சையைச் சார்ந்துள்ள கும்பகோணத்தின் சிறப்புப் பற்றியும் அங்குள்ள கோயில் குளங்களின் பெருமை பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆர்வத்தினால் **கும்பேசுவரர் திருக்கோயிலும் மகாமகத் திருவிழாவும்** என்னும் இந்நூலை வெளியிட்டுதவ விரும்பியது தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாகிய கோயிற் களஞ்சியம் சிறப்பாசிரியர் புலவர் கோ.மு. முத்து சாமிப்பிள்ளை (இ.ஆ.ப ஓய்வு) அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் விருப்பினை நிறைவேற்றும் முகத்தான் சிறிது கற்றாரும் கற்றுப் பயன்பெறும் வகையில் இந்நூலை ஆக்கி அளித்துள்ளார்கள்.

இலக்கியத்தில் கும்பகோணம், கும்பகோணக் கோயில்கள், இங்குள்ள தீர்த்தங்கள், மூர்த்தங்கள், வழிபட்ட அடியவர், பாடிய பாவலர்கள், மகாமகக் காலம், மகாமகக்குளம், அதன் மகத்துவம் என்ற வகையில் முறைப்படுத்தி நூலாசிரியர் இந்நூலை உருவாக்கித் தந்துள்ள சீர்மையைத் தமிழகமே பாராட்டி வரவேற்கும்.

மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிது என்ற வகையில் இந்நூல் சிறிய அளவினதே ஆயினும் இதன் பெருமை உலகளாவியதாகும்.

நல்ல ஒரு தெய்வப்பணியைச் செய்தளித்த நூலாசிரியர் அவர்களை தமிழகச் சான்றோர்களோடு சேர்ந்து நானும் பாராட்டி மகிழ்கின்றேன்.

தமிழக மக்கள் ஏற்றுப் போற்றுவார்களாக.

18_2_1992 **சி. பாலசுப்பிரமணியன்**

பதிப்புரை

பொய்கையில் நீராடிப் புறந்தூய்மை பெற்றுத் தெய்வக்கோயிலில் இறைவனை வழிபட்டு அகத்தூய்மையும் பெறுதல் தமிழ்மக்களின் வழிபாட்டு முறையாகும். பண்ணார் தமிழில் அவன்புகழ்பாடிக் கண்ணிமை மூடிக் கரங் குவித்து இறைஞ்சுவர் தமிழக மாந்தர்.

நன்செய்வளமும் நெஞ்சை அள்ளும் கலைவளமும் கொஞ்சிக் களிப்பூட்டும் தஞ்சைமாவட்டத்து ஊர்கள் அனைத்தும் கோயிலும் குளமும் குளிர்மரக்காவும் கொண்டு அமைந்தவையே. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்பது தமிழகப் பழமொழியன்றோ!

ஐம்பதுக்கும் மேற்பட்ட கோயில்களையும் இருபதுக்கும் மேற்பட்ட தீர்த்தங்களையும் கொண்டு காவிரியும் அரசலாறும் அன்னையரெனத் தண்புனல் ஊட்ட, அடியார்தம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் ஆலய வழிபாட்டுத் தலமாக விளங்குவது அன்றைய குடமூக்கு; இன்றைய குடந்தை-கும்பகோணம்

கும்பேசுவரர் கோயிலும் அங்குள்ள மகாமகக் குளமும் மக்களைத் தம்பால் ஈர்க்கும் சக்தி பெற்றவை. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூத்து மணக்கும் குறிஞ்சிமலர்போலப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையே மலரும் மகாமகத் திருவிழா இந்த ஆண்டில் (18_2_92) மலர்கிறது.

வங்கக்கடலென மகாமக விழாவில் மக்கள் கூடவேண்டும்; அவர்கள் மகாமகத்தின் மகத்துவத்தை உணரவேண்டும் என்ற உணர்வோடு வெளியிடப்பெறுவதே **"கும்பேசுவரர் கோயிலும் மகாமகத் திருவிழாவும்"** என்னும் இந்நன்னூல் .

ஏழையெளியவரும் ஏற்றுப் பெற்றுப் படிக்க வேண்டுமென்னும் பெருந்தகைமையோடு தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் சி.பாலசுப்பிரமணியன் அவர்களும் மதிப்புறு பதிவாளர் இராமமுத்தையன் அவர்களும் இந்நூலை மலிவு விலைப் பதிப்பாகப் பதிப்பித்துக் கொடுக்க ஆணை வழங்கிய பெருந்தன்மை பாராட்டுக்குரிய ஒரு நற்செயலாகும்.

இரண்டு நாட்களில் இந்நூலினை அச்சிட்டு வழங்குதற்காக கால நேரம் கருதாது பணியாற்றிய பதிப்புத் துறையினர்க்கும் லேசர்பொறித் துறையினர்க்கும் அச்சகத் துறையினர்க்கும் தனிப்பட்ட முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் கடமை எனக்குண்டு.

பக்தகோடிகள் இந்நூலைப் பெற்றுப் பயன் பெறுவார்களாக

புலவர் சி. இளங்கோவன்,
உதவி இயக்குநர்,
பதிப்புத்துறை.

முன்னுரை

தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் களஞ்சியத்தை மாவட்ட வரிசையில் அச்சிட்டு வெளியிடத் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம் திட்டமிட்டு, இதன் முதல்படியாக வடஆர்க்காடு மாவட்டக் கோயில்களின் களஞ்சியம் அண்மையில் வெளியிட்டது. இதற்கு முன், சில கோயில்கள் குடமுழுக்கு விழாக்களை முன்னிட்டு அக்கோயில்களின் நூல்களைத் தொகுத்து வெளியிடத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆதரவு அளித்தது. இவ்வகையில் தக்கோலம் திருஊறல் மகாதேவர் கோயில், தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் ஆகியவற்றின் நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடப் பெற்றன. இதேமுறையில் கும்பேசுவரர் திருக்கோயில் நூலும் மகாமக விழாவை முன்னிட்டுக் **"கும்பேசுவரர் திருக்கோயிலும் மகாமகத் திருவிழாவும்"** என்னும் தலைப்பில் வெளிவருகிறது.

இந்நூலில் காவிரிக்குத் தனிமதிப்பு அளிக்கப்பெற்றுள்ளதை யாவரும் வரவேற்பார்கள் என நம்புகிறேன். இம்மகாமக விழாவில் கலந்துகொள்ள இயலாதவர்கள் மகாமக விழாவைப்பற்றி முன்னதாகவே அறிந்துகொள்ள இந்நூல் உதவும் என நினைக்கிறேன்.

இந்நூலை அச்சிட்டு வெளியிட ஏற்றுக்கொண்ட தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வகையில் பதிவாளர் அவர்களுக்கும் பதிப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

இந்நூலை எழுதிய போது எனக்குச் சில விவரங்களைத் தந்த முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. ஆ. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

இந்நூல் வெளியிடக் கோயிலைப் பற்றிய பல விவரங்களைக் கொடுத்து உதவிய கும்பேசுவரர் கோயில் நிருவாக அலுவலர் திரு. க. ஸ்டாலின் அவர்களுக்கும் யான் 26.1.92 ஆம் நாளில் இத்திருக்கோயிலுக்குச் சென்ற போது இக்கோயில் பற்றி எழுதுவதற்கு ஆதரவு தந்த இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையாளர் திரு. என். எஸ். இராமச்சந்திரன் அவர்களுக்கும் யான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

கோ. மு. முத்துசாமிபிள்ளை

கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் கோயில்



தரைப்பட விளக்கம்

1. ஆதிகும்பேசுவரர் (மூலவர்)
2. சோமாசுகந்தர்
3. மங்களநாயகி
4. நடராசர்
5. அதிகார நந்தி
6. அறுபத்துமூவர்
7. சப்தகன்னியர் & அஷ்ட லிங்கங்கள்
8. விநாயகர்
9. பிட்சாடனர்
10. முருகர் (உற்சவர்)
11. கார்த்திகேயர்
12. சிவலிங்கம்
13. இலட்சுமி
14. பள்ளியறை
15. கட்டளை அறைகள்
16. கிராதமூர்த்தி
17. வயிரவர்/ சுரதேவ
18. நந்திதேவர்
19. பலிபீடம்
20. கொடிமரம்
21. மடைப்பள்ளி
22. யாகசாலை
23. நவக்கிரகங்கள்
24. தண்டாயுத பாணி
25. கல்யாண மண்டப அலுவலகம்
26. யானைக்கூடம்
27. திருக்குளம்
28. பசுமடம்
29. தலவிருட்சம்
30. நந்தவனம்



மகாமகக்குளத் தீர்த்த விபரம்

(கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் கோயில் நூல்)

1. கும்பேசுவரர் திருக்கோயில்

முன்னுரை

தமிழகக் கோயில்களுள் சில கடற்கரைகளிலும் சில ஆறுகளின் கரைகளிலும் சில குன்றுகளின் உச்சியிலும் சில எழில்மிக்க சோலைப்பகுதிகளிலும் பல ஊர்களின் உள்ளும் புறமும் விளங்குகின்றன. உலகத்து உயிர்களெல்லாம் துன்பத்திலிருந்து நீங்கப் பெற்று இன்பம் எய்தி உய்ய இயலுமாறு இறைவன் உருவமற்ற தமது நிலையிலிருந்து இறங்கி, ஆங்காங்குள்ள பற்பல தலங்களில் உருவத்திருமேனி தாங்கி எழுந்தருளியுள்ளார். இறைவன் உருவத்திருமேனி கொண்டு காட்சியளிக்கின்ற கோலத்தை வைணவக் கோட்பாட்டில் "அர்ச்சாவதாரம்" என்பர்.

இம்மையில் நல்வாழ்வையும் மறுமையில் வீடு பேற்றினையும் விரும்பி மக்கள் கோயில் வழிபாட்டில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு அமைதி காண்கிறார்கள். திருக்கோயில்கள் மக்களது வாழ்க்கையில் பலவகைகளில் பயன் அளித்துப் பல முறைகளில் வளம்படுத்தி வருகின்றன. நீதிமன்றங்களில் நீதிபதி செயலாற்றுவது போன்று கோயில் களில் இறைவன் வியத்தகு வகையில் அனைவருக்கும் நீதி வழங்குகிறார். இந்நிலைமையை நன்குணர்ந்து திருக்கோயில் களில் குடிகொண்ட பெருமானை அன்போடு வழிபட்டு அவர் வகுத்த நெறிமுறையில் வாழ்ந்து, அவர் அருளைப் பெறுதற்குத் தொடர்ந்து முயலுதல் நம் கடமையாகும்.

2. கும்பகோணத்தின் சிறப்பு

இந்நூல் எடுத்துக்காட்டும் குடந்தை எனப்படும் கும்பகோணத்தைத் தன்னகத்தே கொண்ட தஞ்சாவூர் மாவட்டம், நாட்டை வளப்படுத்தும் காவிரி பாயும் சோழநாட்டில் அமைந்துள்ளது. இந்நாட்டுக்கு வளநாடு, சென்னிநாடு, செம்பியர் நாடு, பெருநீர் நாடு முதலிய பொருள் விளங்கும் பெயர்கள் வழங்கிவருகின்றன. "சோழநாடு சோறுடைத்து" என்னும் முதுமொழிக்கேற்ப நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சாவூர் மாவட்டம் கலைக்களஞ்சியமாக விளங்கும் கோயில்கள் பலவற்றைக் கொண்டு திகழ்கிறது. பொதுமுறையில் பல கலைகளை_ சிறப்பாக இசைக்கலையை வளர்த்த மாவட்டம் இதுவாகும்.

இம்மாவட்டத்தில் சென்னை _ திருச்சிராப்பள்ளி முதன்மை இருப்புப்பாதையில் மயிலாடுதுறையிலிருந்து 32 கிலோமீட்டர்த் தொலைவில் கும்பகோணம் திகழ்கிறது. இந்நகர் தென்வடலாக இரண்டு மைல் அளவும் கீழ்மேலாக ஒன்றரை மைல் அளவும் கொண்டது. கி.பி. 9_ஆம் நூற்றாண்டில் சோழர்கள் இதனைத் தங்கள் தலைநகராகக் கொண்டார்கள். "சோழர்கள் வாழ்ந்த இடமாக இருந்த சோழ மாளிகையும் பழங்கோயில்களும் கும்பகோணத்தின் பழமையை வெளிப்படுத்துகின்றன" என அறிஞர் பெர்கூசன் தெரிவிக்கிறார்.

இங்குத் தேவாரப் பாடல்கள் பெற்ற திருக்குடமூக்கு, குடந்தைக் கீழ்க் கோட்டம், குடந்தைக் காரோணம் ஆகிய திருக்கோயில்களும் ஆழ்வார்கள் பாசுரம் பெற்ற சாரங்கபாணி கோயிலும் முறையாக வழிபடப் பெற்று வருகின்றன. இவை தவிர சிவன் கோயில்களும் வைணவக் கோயில்களும் மிகுதியான எண்ணிக்கையில் சிறந்து விளங்குகின்றன. இவ்வகையில் கோயில்கள் மிக்கது கும்பகோணம் என்னும் பெருமை கொண்டது கும்பகோணம்.

3. பெயர் விளக்கம்

பிரளய காலத்தில் மிதந்து வந்த அமுதகுடத்தின் மூக்கின் வழியே அமுதம் பரவிய தலம் குடமூக்கு என்னும் பெயர் தாங்கியுள்ளது என்னும் விளக்கம் குடமூக்கு என்னும் சொற்றொடருக்குத் தரப்படுகிறது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாகிய திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசு நாயனாரும் இத்தலத்தைக் குடமூக்கு எனவும் திருக்குடந்தை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆழ்வார்களுள் பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார், பேயாழ்வார் ஆகியோர் குடந்தை எனவும் பூதத்தாழ்வார் குடமூக்கு எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். திருநாவுக்கரசு நாயனார் தலயாத்திரையைப் பற்றித் தாம் கூறியபோது சேக்கிழார் இத்தலத்தைக் குடமூக்கு என நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

தஞ்சாவூர் தஞ்சை எனவும் நெல்வேலி நெல்லை எனவும் கோயம்புத்தூர் கோவை எனவும் நாகப்பட்டினம் நாகை எனவும் விளங்கிவருவன போன்று திருக்குடமூக்கும் திருக்குடந்தை எனத் திகழ்கிறது. இடைக்காலத்தில்

திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர் இத்தலத்துத் திருமுருகன் மீது பாடிய பாட்டில் "மாலைதளி வந்து கும்ப கோண நகர் வந்த பெருமாளே" எனப் போற்றியுள்ளார். குடமூக்கு என்னும் சொற்றொடர் "கும்பகோணம்" என மாறியது இடைக்காலத்தில் எனக் கொள்ளலாம். குடம் என்பதற்குக் 'கும்பம்' என்னும் பெயருண்டு. 'கோணம்' என்னும் சொல்லுக்குரிய பல பொருள்களுள் 'மூக்கு' என்னும் பொருளும் அடங்கும். இவ்வாறு குடமூக்கு என்பதைக் கும்பகோணம் என ஆக்கிக் கொண்டார்கள்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து மிகுதியான கவிதைகளைக் கொண்ட பல நூல்கள் இயற்றிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தாம் எழுதிய திருக்குடந்தைப் புராணத்தின் திருத்தல விசேடப் படலத்திலுள்ள 18-ஆவது பாடலில் இத்தலத்தைக் கும்பகோணம் எனக் கொள்கிறார். இதே படலத்தின் 19-ஆவது பாடலில் இதனைக் குடமூக்கு எனக் காட்டுகிறார்.

கும்பத்தில் இருந்த அமுதத்தினின்றும் வெளிப்பட்டவர் கும்பேசர். இவ்வரலாற்றைக் கும்பகோணத் தலபுராணம் கூறுகிறது.

4. கும்பேசுவரர்

பிரளயம் உலகெல்லாவற்றையும் அழித்துவிடும் சூழ்நிலை பற்றி முன்னதாகவே அறிந்துகொண்ட பிரமதேவன் அப்பிரளயத்திற்கு அஞ்சிக் கயிலாயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை அணுகி "பெருமானே!

பிரளயத்தின் போது பெருவெள்ளத்தில் உலகெல்லாம் அழிந்துவிடும். அதன்பின்னர்ப் படைப்புத் தொழிலை யான் எவ்வாறு புரிவேன்? இதற்கு ஒரு வழிவகுத்து எனக்கு உதவியருள்க" என வேண்டினான். இம்முறையீட்டுக்குச் செவிசாய்த்த பெருமான், "பிரமதேவ! அஞ்சற்க! இப்போதே நீ பல புண்ணியத் தலங்களிலும் உள்ள மணலைச் சிறிது சிறிதாக எடுத்துவந்து அமுதத்தோடு அம்மணலைப் பிசைந்து மாயாமயக்கும்பம் ஒன்று செய்க! அதில் அமுதத்தை நிரப்புக! எழுவகைத் தோற்றமும் நான்கு வகை பீஜமுமுள்ள எல்லா சீவராசிகளின் உயிர்களையும் கொண்ட விதையாகிய சிருட்டிப்பீஜத்தை யாம் தருவோம். அதனை அதில் இடுக! அதன்மீது தேங்காயை வைத்திடுக! அதற்கு மாவிலையால் அலங்கரிக்க வேண்டும். கும்பத்திற்கு நூல் சுற்றுக! இவ்வாறு அலங்கரிக்கப்பட்ட அந்த அமுத கும்பம் சாய்ந்து விடாத நிலையில் அதனை ஓர் உறியில் ஏற்றி அந்த உறியை மேருமலையில் வைத்து அதற்கு வில்வத்தால் அருச்சனை புரிக! பின்னர் உலகமெல்லாம் அழியும்போது அக்கும்பம் பிரளய வெள்ளத்தில் மிதந்து தெற்கு நோக்கிச் சென்று ஓர் இடத்தில் தங்கும். அப்போது யாம் அங்கு வந்துசேர்ந்து வேண்டுவன செய்வோம்" என்றனர். பிரமதேவன் அவ்வாறே செய்து சிவபெருமான் திருவருளை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

பின்னர்ச் சில நாள்களில் கடல்களெல்லாம் ஒன்றாய்க் கலந்து பெருமழை பெய்விக்க, வெள்ளம் பெருக்கெடுத்தது; பெருங்காற்று வீசிற்று. பிரமதேவன் மேருமலை மீது வைத்திருந்த கும்பம் உறியோடு வெள்ளத்தில் மிதந்தது. அந்த உறி ஒருபக்கம் வில்வம் மறுபக்கம் தேங்காய் வேறொரு பக்கமாய்ச் சிதறி வீழ்ந்தன. பின்னர் அக்கும்பம் ஓரிடத்தில் தங்கியது. அந்த இடத்தில் அந்தக் கும்பத்திலிருந்து விழுந்த மாவிலை வன்னி மரமாயிற்று. அப்போது சிவபெருமான் தூரத்திலிருந்தவாறே ஒரு பாணத்தை அக்கும்பத்தை நோக்கி

எய்தார். அந்த அம்பு அமுத கும்பத்தின் மூக்கைச் சிதைத்தது. அக்கும்பத்திலிருந்த அமுதம் நாற்புறங்களிலும் பரவிற்று. பின்பு சிவபெருமான் அக்கும்பத்தின் அருகில் சென்று அங்கு அமுதத்தில் நனைந்து கிடந்த வெண்மணலை வாரிக் கும்பத்தில் சேர்த்தார். அமுதத்தோடு கலந்திருந்த வெண்மணல் சிவலிங்க வடிவமாயிற்று. அந்தச் சிவலிங்கத்தில் சிவபெருமான் மறைந்தார். இவ்வாறு இவர் கும்பத்தில் தோன்றியதால், கும்பேசுவரர்[1] என்னும் பெயரில் அவர் விளங்கிவருகிறார். அந்தக் கும்பத்தின் மீது இடப்பட்டிருந்த வில்வம் விழுந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் தோன்றிற்று. பின்னர் அச்சிவலிங்கத்திற்கு ஒரு கோயில் கட்டப்பெற்றது. இதுவே வில்வனேசுவரர் கோயில். இது கும்பேசுவரர் கோயிலுக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ளது. வில்வனேசுவரர் நாகராஜனாகிய ஆதிசேடனுக்கு அருள் செய்ததால் இதன் அடிப்படையில் இவ்விறைவனுக்கு நாகேசுவரர் என்னும் பெயர் விளங்குவதாயிற்று. இவர் இக்கோயிலில் சிவலிங்க வடிவில் நாகாபரணம் கொண்டு பொலிவுடன் காட்சி அளிக்கிறார். இங்கு அம்மன் பெயர் பெரியநாயகி ஆகும்.

இக்கோயிலின் தீர்த்தம் நாக தீர்த்தம். இத்தீர்த்தத்தில் நாகராசன் நீராடி வழிபாடாற்றியதால் இப்பெயர் இதற்கு அமைந்தது. சூரியன் இக்கோயிலில் வழிபாடாற்றி அருள் பெற்றான். இங்குள்ள தீர்த்தத்தில் சூரியன் நீராடியமையால், இது சூரிய தீர்த்தம் என்னும் பெயரைக் கொண்டுள்ளது. இங்குச் சூரியனுக்குத் தனிக் கோயிலுள்ளது.

---

1. வடமொழிச் சந்தி இலக்கணத்தின்படி வேத - ஆகமம்= வேதாகமம் எனவும் கும்ப - அபிடேகம் = கும்பாபிடேகம் எனவும் அமைகின்றன. இவ்விதி தீர்க்க சந்தி எனப்படும். கங்காதர—ஈசுவரர் கங்காதரேசுவரர் எனவும் கும்ப—ஈசுவரர்= கும்பேசுவரர் எனவும் கும்ப—ஈசர்= கும்பேசர் எனவும் அமையும். இது குணசந்தி.

இக்கோயிலிலுள்ள சிவலிங்கத் திருமேனியின் மீது சித்திரை மாதத்தின் 11, 12, 13-ஆம் நாள்களில் சூரிய கதிர்கள் பதிகின்றன.

இக்கோயில் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்னும் பெயரையும் கொண்டுள்ளது. இத்தலத்து இறைவன் மீது திருநாவுக்கரசு நாயனார் ஒரு திருத்தாண்டகம் பாடியுள்ளார். இஃது ஆறாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இப்பதிகத்தின் பெயர் குடந்தைக் கீழ்க் கோட்டப் பதிகம் ஆகும்.

அமுதக்கும்பத்திற்கு ஆதாரமாக இருந்த உறி விழுந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் தோன்றிற்று. அங்கு ஒரு கோயில் கட்டப்பெற்றது. இக்கோயில் குடந்தைப் பொற்றாமரைக் குளத்திற்குக் கீழ்ப்புறமுள்ளது. சிக்கம் என்பது உறி; உறி தங்கிய இடம் சிக்கேசம். சோமன் என்பது சந்திரன் பெயராகும். சோமனுக்குச் சிவபெருமான் அருள் புரிந்துள்ளார். இதன் காரணமாக இங்கு எழுந்தருளிய சிவ பெருமானுக்குச் சோமேசுவரர் என்னும் பெயர் வழங்கி வருகிறது. இங்குள்ள தீர்த்தம் சோம தீர்த்தம் எனப்படுகிறது. தேவிக்குச் சோமசுந்தரி என்பது பெயர். குடந்தைக் காரோணப் பதிகத்தைத் திருஞானசம்பந்தர் அருளி யுள்ளார். இது முதல் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. சோமேசுவரர் கோயிலைக் குடந்தைக் காரோணம் என ஏற்றுக்கொண்டு குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம் 1958-ஆம் ஆண்டில் திருஞானசம்பந்தர் காரோணத் தேவாரப் பதிகத்தைக் கல்லில் பொறித்துச் சுவரில் பதித்துள்ளது. வாயிலில் திருமுறைக் கோயில் இருக்கிறது.

அமுதக்கும்பத்தின் மீது வைத்திருந்த நாளிகேரம் (தேங்காய்) விழுந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் தோன்றியது. இதற்கு ஒரு கோயில் கட்டப்பெற்றது. இதற்கு நாளிகேசரம்

என்னும் பெயரும் இங்கு எழுந்தருளிய சிவபெருமானுக்கு அபிமுகேசுவரார் என்னும் பெயரும் அமைந்தன. இக்கோயில் தேவியின் பெயர் அமுதவல்லியாகும். இது மகாமகக் குளத்தின் கீழ்க்கரையில் அமைந்திருக்கின்றது.

ஊமையாக இருந்த இளவரசன் ஒருவனுக்கு ஏற்பட்ட ஊமைத்தன்மையையும் பார்ப்பனி ஒருத்தியின் குட்ட நோயையும் இம்மூர்த்தி தீர்த்தார் என்பது கூறப்படுகிறது.

அமுதக்கும்பத்திற்கு அணியாக இருந்த பூணூல் விழுந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் தோன்றிற்று. அதற்கு ஒரு கோயில் கட்டப்பெற்றது. அது "யக்ஞோபவிதேசுவரர் கோயில்" என விளங்கிவந்தது. இக்கோயில் மகாமகக் குளத்தின் தென்மேற்கு முனையில் அமைந்துள்ளது. கௌதமமுனிவர் தம் பாவங்களைப் போக்கிக்கொள்ளத் துருவாசர் அளித்த அறிவுரைக்கேற்ப, இங்குவந்து யக்ஞோபவிதேசுவரரை வழிபட்டுப் பேறுபெற்றார். இம்முனிவர் வேண்டுகோளுக் கேற்ப இங்கு இறைவன் கௌதமேசுவரர் என்னும் பெயர் தாங்கினார். இம்முனிவர் நீராடிய தீர்த்தம் கௌதம தீர்த்தம் எனக் குறிக்கப்படுகிறது.

பிரளயத்தின்போது மிதந்த அமுதக் கும்பத்தின்மீது சிவபெருமான் ஒரு பாணம் (அம்பு) எய்தார். அவர் அம்பு தொடுத்த இடத்தில் ஒரு சிவலிங்கம் தோன்றிற்று. அதற்கு ஒரு கோயிலும் கட்டப்பெற்றது. இத்தலம் பாணபுரேசம் என்னும் பெயர் பெற்றது. இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் பாணபுரீசுவரர் என்னும் பெயர் தாங்கினார். இக்கோயில் கும்பகோணம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வட மேற்கில் 1.5 கிலோமீட்டர்த் தொலைவில் இருக்கின்றது. இங்குச் சிவபெருமான் திருவுருவம் ஒன்று மூன்று கால்களுடன் விளங்குகிறது. இத்திருவுருவத்திற்குச் சுரகரேசுவரர் என்பது பெயராகும். சுரநோயுற்றவர்

இத்திருவுருவத்தை வழிபடுதலால் சுரம் நீங்கப்பெறுகிறார்கள் என்பது நம்பிக்கையாகும்.

சிவபெருமான் அம்பினால் அமுதக்கும்பத்தை உடைத்ததால் அதிலிருந்து வெளிவந்த அமுதம் குடமூக்கில் (கும்பகோணத்தில்) மகாமகக் குளத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமன்றி அங்கிருந்து ஐந்து குரோகம் தொலைவுவரையில் பரவி, அது பரவிய இடங்களையெல்லாம் செழுமை யாக்கியது. ஒரு குரோகம் என்பது இரண்டரை நாழிகை வழி அளவுள்ள தூரமாகும். இரண்டரை நாழிகை ஒருமணிநேரம். ஒருமணி நேரம் ஒருவர் நடந்து செல்லக்கூடிய தூரம் 4.8 கிலோமீட்டர். ஐந்துமணிநேரம் செல்லக்கூடிய தூரம் 24 கிலோமீட்டர் ஆகும். இவ்வளவு தூரம் அமுதம் பரவியது. இவ்வகையில் செழுமை பெற்ற ஊர்களுள் ஒன்று திருநாகேசுவரமாகும். இவ்வூர் கும்பகோணத்திற்கு வட கிழக்கில் ஐந்து கிலோமீட்டர்த் தொலைவிலுள்ளது: இது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர்களின் தேவாரப் பாடல்கள் பெற்றது. சேக்கிழார் திருப்பணி செய்து நேசித்த தலம் இதுவாகும். இதன் விளைவாக அவர் தம் ஊரான குன்றத்தூரில் இப்பெயரில் ஒரு திருக்கோயில் கட்டினார்.

தாராசுரம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ளது. இங்கு ஐராவதீசுவரர் கோயில் அரிய கலைச்சிற்பங்களுடன் சிறந்து விளங்குகிறது. இஃது இராசராசசோழனால் கட்டப்பெற்று மூன்றாம் குலோத்துங்கனால் சீர் செய்யப்பட்டது.

சுவாமிமலை கும்பகோணத்திற்கு 8 கிலோ மீட்டர்த் தொலைவு மேற்கே அமைந்துள்ள முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகும்.

இத்தலங்களும் இவற்றைப் போன்ற பல தலங்களும் குடமூக்கு அமுதம் பரவியதால் செழுமையுற்றன.

5. நவகன்னியர்

கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, பயோடினி, சரயு, கோதாவிரி, காவிரி, குமரி ஆகிய ஒன்பது நதிகளும் நவகன்னியராக உருவெடுத்துச் சிவபெருமானிடம் சென்று, "எங்களது நீரில் பலர் நீராடித் தங்கள் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்கிறார்கள். அப்பாவங்களைத் தாங்குபவர்கள் நாங்கள். இவ்வகையில் நாங்கள் அடைந்த பாவத்தைப் போக்கிக்கொள்ள வழி காட்டுவீராக" என வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் மீது இரக்கம் கொண்ட சிவபெருமான், "நீவீர் எல்லீரும் காசிக்கு வாரீர். அங்கிருந்து நும்மை தெற்கே அழைத்துச் செல்வோம்; அங்கு நீவிர் நும்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வழிவகுப்போம்" என்று அருளினார். அவர்களும் சிவபெருமான் அருளாணைக்கேற்பக் காசியை எய்தினார்கள். அவர்களைச் சிவபெருமான் குடமூக்குத் தலத்திற்கு அழைத்து வந்தார். அவர்கள் இங்கு மகாமகக் குளத்திற்கு வடபுறத்தில் சாலை ஓரத்திலுள்ள காசிவிசுவநாதர் கோயிலில் தங்கினார்கள். இவர்களின் திருவுருவங்கள் 1.5 மீட்டர் உயரத்தில் நின்ற நிலையிலுள்ளன. இவ்வுருவங்களின் மையத்தில் காவிரி நதியின் திருவுருவம் அமைந்துள்ளது. உலகில் நல்வாழ்வு பெற இங்குக் காவிரிக்கு வழிபாடு செய்கிறார்கள்.

நவகன்னியர் மகாமகக் குளத்தில் நீராடித் தங்களைப் புனிதப்படுத்திக் கொண்டார்கள். சிவபெருமான் மனமுவந்து இவர்களுக்கு மகாமகக் குளத்தின் கீழ்க்கரையில் தலத்தில்

அபிமுகமாக மேற்கு முகமாக இருந்து காட்சி அளித்தார். இதன் காரணமாக இவருக்கு அபிமுகேசுவரர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இக்கன்னியர்கள் தங்களைத் தூய்மைப் படுத்திக்கொண்ட பின்னர்ச் சிவபெருமான் ஆணைக் கேற்பத் தங்கள் புனிதத் தெய்வ ஆற்றலை இத்தீர்த்தத்தில் செலுத்தினார்கள்.

கங்கை முதலிய நதிகள் இங்குவந்து இம்மகாமகக் குளத்தைச் சிறப்பித்ததைத் தலபுராணம் மட்டும் கூறுவதில்லை. கங்கையானவள் குடமூக்கில் உறைகிறாள் என்பதைத் திருநாவுக்கரசு நாயனார் தாம் அருளிய திருக்குடமூக்குப் பதிகத்தில் குறிப்பிடுகிறார். கங்கை இங்கு உறைவதை,

"நங்கை யாளுமை யாளுறை நாதனார்
அங்கை யாளொ டறுபதந் தாழ்சடைச்
கங்கை யாளவள் கன்னியெனப்படும்
கொங்கையாள் உறையுங்குடமூக்கிலே." (5_22_3)

என்னும் பாடலிலும் கோதாவிரி இங்கு உறைவதை,

"ஓதா நாவன் திறத்தையுரைத்திரேல்
ஏதானும்மினிதாகும்மியமுனை
சேதாஏறுடையானமர்ந்தவிடம்
கோதாவிரியுறையுங்குடமூக்கிலே." (5_22_4)

என்னும் பாடலிலும் சரசுவதி இங்கு உறைவதை,

"காமியஞ்செய்துகாலங்கழியாதே
ஓமியஞ்செய்தங்குள்ளத்துணர்மினோ
சாமியோடு சரச்சுவ தியவள்
கோமியும்உறையுங்குடமூக்கிலே." (5_22_8)

என்னும் பாடலிலும் திருநாவுக்கரசு நாயனார் தெரிவிக்கிறார். இங்குக் காவிரி, நல்யமுனை, கங்கை, குமரி ஆகிய தீர்த்தங்கள் சூழ்ந்தன என்பதை அவர் தாம் அருளிய திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத் திருத்தாண்டகப் பதிகத்தில்,

"ஏவியிடர்க் கடலிடைப் பட்டிளைக் கின்றேனை
இப்பிறவியறுத் தேறவாங்கியாங்கே,
கூவிஅமருலக னைத்துமுருவிப் போகக்குறியில்
அறுகுணத் தாண்டு கொண்டார்போலுந்
தாவிமுதற்காவிரிநல் யமுனைகங்கை
சரசுவ திபொற்றாமரைபுட்கரணிதெண்ணீர்க்
கோவியொடுகுமரிவருதீர்த்தஞ்சூழ்ந்த
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே." (6_75_10)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

கங்கை முதலிய தீர்த்தங்கள் மகாமகத் திருக்குளத்தில் நீராட வந்ததைச் சேக்கிழார் தாம் அருளிய திருஞான சம்பந்தர் புராணத்தில்,

"பூமருவும் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயில்
தா மருவு மலர்க்கையால் தொழுதுவலங்
கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து
கண்களித்தார்."

எனப் பாடியுள்ளார்.

குடமூக்கில் வழிபட நான்கு திசைகளிலிருந்து மக்கள் வருகிறார்கள் என்பதைச் சேக்கிழார்,

"போற்றிசைத்துப் புனிதர் அருள் பெற்றுப்போந்
தெவ்வுருவும்
தோற்றுவித்த அயன்போற்றும் தோணிபுரத்
தந்தணனார்
ஏற்றுமிசை ஏற்றுகந்த இறைவர் தமை
ஏத்துதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு
நண்ணினார்."

எனத் தெரிவிக்கிறார்.

6. மகாமகம்

மகம் என்பது 27 நட்சத்திரங்களில் ஒன்று. இது பெரிதாகக் கொண்டாடப்பெறுகிறது. இவ்வாறு கொண்டாடப்படுகிற போது இது மகாமகம் எனப்படுகிறது.

இது எவ்வாறு மகாமகம் ஆகிறது என்பதைக் காண்போம்.

சூரியன் நிலைத்து ஒரே இடத்தில் இருப்பதாகவும் அதனைப் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டே சூரியனைச் சுற்றுகிறது எனவும் வானியல் கூறுகிறது. சோதிடமோ சூரியன் சித்திரை முதல் பங்குனி ஈறாகவுள்ள பன்னிரண்டு மாதங்களில் மேடம் முதலிய பன்னிரண்டு இராசிகளில் உலா வருவதாகக் கூறுகிறது. சந்திரன் பூமியை முப்பது நாள்களுக்குள் சுற்றி வருகிறது என வானியலும் சோதிடமும் கூறுகின்றன. சந்திரன் பூமியைச் சுற்றிவரும் போது ஒவ்வொரு இராசியிலும் உரிய இரண்டேகால்

நட்சத்திரங்களைக் கொண்டிருக்கிறது. சூரியன் உயிர் போன்றவன்; சந்திரன் உடல்போன்றவன். சந்திரனுக்கு ஒளிதருபவன் சூரியன். இவை இரண்டும் நாளும் நாம் காணும் கிரகங்கள். இவ்விரண்டோடு சேர்த்து எண்ணப்படுவதற்குரிய கிரகம் குரு. இதுவும் மதிப்பிடத்தக்க பெரிய கிரகம். குரு ஒவ்வொரு இராசியிலும் ஓராண்டு வீதம் உலாவருகிறார். குரு ஒவ்வொரு இராசியிலும் ஓராண்டு வீதம் பன்னிரண்டு இராசிகளிலும் சுற்றிவரப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

சூரியன் ஏழாம் இடத்திலிருந்துகொண்டு சந்திரனை நேர்முகமாகப் பார்ப்பது பௌர்ணமி நாளில் ஆகும். அப்போது தான் சூரியனிடமிருந்து முழுஒளியையும் சந்திரன் பெற்றுக்கொள்கிறான். ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி நாளில் சூரியனுக்கு ஏழாம் இடத்தில் சந்திரன் இருக்கிறான். பௌர்ணமி நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாகச் சித்திரை மாதப் பௌர்ணமியில் சூரியன் மேடத்திலிருக்கும் போது அந்த வீட்டிற்கு ஏழாவதாகவுள்ள துலாராசியில் சந்திரன் இருக்கிறான். இது சித்திராணப்பௌர்ணமி எனக் கொண்டாடப்பெறுகிறது. இது போன்று ஆடிமாதம் பௌர்ணமியில் சூரியன் கடகராசியில் இருக்கிறார். அந்நாளில் கடகராசிக்கு ஏழாவது வீடாகிய மகரத்தில் சந்திரன் இருக்கிறார். இது தைப்பூசம்.

சூரியன் சந்திரன் ஆகியோர்களைப் போன்று மதிப்பிடத்தக்க கிரகம் குரு. குரு ஒவ்வொரு இராசியில் ஒவ்வோர் ஆண்டாக 12 இராசிகளில் சுற்றிவர 12 ஆண்டுகள் ஆகின்றன. இவ்வாறு சுற்றிவரும் போது சந்திரனும் குருவும் ஒன்றுசேர்ந்து சூரியனது ஆட்சிவீடாகிய சிம்மத்தில் இருக்க, சிம்மராசிக்கு ஏழாவது வீடாகிய கும்பத்தில் சூரியன் இருந்துகொண்டு, அங்கிருந்து தமக்கு ஏழாவது வீடாகிய

சிம்ம இராசியில் குருவையும் சந்திரனையும் நேராகப் பார்க்கும் நாள் மகாமக நாளாகும். இந்த சிம்மராசிக்குரிய மகம், பூரம், ஆகிய இரு நட்சத்திரங்களும் உத்திரத்தில் நான்கிலொரு பாகமும் ஆகும். இந்நிலைமை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வரும். இதுவே மகாமகம் எனப்படுகிறது. இவ்வாண்டு மகாமக நாளில் கிரகங்கள் இருக்கும் நிலையை இதன் கீழ்க் குறிக்கப்படும் இராசிச் சக்கரத்தின் கட்டடங்களில் காணலாம்.

மாசி மகத்தின் போது கிரகங்களின் நிலை. மாசி 6_ஆம் தேதி பௌர்ணமி நாழிகை 17 . 30 மகம் - நாழிகை 49 . 25

18 . 2. 92 செவ்வாய்க் கிழமை

			கேது
புதன் சூரியன்			
சுக்கிரன் செவ்வாய் சனி			குரு சந்திரன்
இராகு			

மகாமக நாளில் பௌர்ணமி 17.30 நாழிகை, அஃதாவது பகல் 1.34 மணி வரையில் இருக்கிறது. மகநட்சத்திரம் 49_25 நாழிகை. அஃதாவது இரவு 2.20 மணி வரையில் இருக்கிறது. இம்மகாமக நாள் குறிப்பிடத்தக்க வகையில்

சிறப்பாகவுள்ளது என்பதை இதன் ஓரிரு சிறப்பியல்புகளைக் கொண்டு சொல்லலாம். கோள்சாரம் என்பதைக் கோசாரம் என்பர் உலகவழக்கில். கோள்சாரம் என்பது சந்திரன் இடத்திலிருந்து கணக்கிட்டு வருகிற நன்மை தீமைகளை எடுத்துக்கூறுவது. இங்குச் சந்திரனுக்கு ஏழாம் வீட்டிலுள்ள சூரியனோடு புதன் இணைந்திருப்பது நன்மை அளிப்பதாக வுள்ளது. சந்திரனுக்கு ஆறாம் இடமாகிய மகரத்தில் சுபகிரகமாகிய சுக்கிரன் இருப்பினும் கடினகோள்களாகிய செவ்வாயும் சனியும் இருக்கின்றனர். இவர்கள் இருப்பது பகைவீடாகிய ஆறாம் இடம். பகைவீடாகிய ஆறாம் இடத்தில் கடினகோள்கள் இருப்பது பகைமையை ஒழிப்பதைக் காட்டுகிறது. இவ்வகையில் இம்மகாமகம் சிறப்புடையதாகக் காணப்படுகிறது. இன்னும் இதிலுள்ள சிறப்பியல்புகளைப் பற்றிச் சோதிட வல்லுநர்கள் தெரிவித்திருப்பார்கள்.

(பங்குனி) (மீனம்) பூரட்டாதி 1/4 உத்திரட்டாதி ரேவதி	(மேடம்) அசுவினி (சித்திரை) பரணி கார்த்திகை 1/4	(வைகாசி) (இடபம்) கிருத்திகை 3/4 ரோகினி மிருகசீரிடம் 1/2	(மிதுனம்) ஆனி மிருகசீரிடம் 1/2 திருவாதிரை புனர் பூசம் 3/4
(கும்பம்) (மாசி) அவிட்டம் 1/2 சதயம் பூரட்டாதி 3/4	இராசிச் சக்கரம்		(ஆடி) கடகம் புனர்பூசம் 1/4 பூசம் ஆயில்யம்
(மகரம்) உத்திராடம் 3/4 திருவோணம் அவிட்டம் 1/2 (தை)			சிம்மம் (ஆவணி) மகம் பூரம் உத்திரம் 1/4
(தனுசு) (மார்கழி) மூலம் பூராடம் உத்திராடம் 1/4	(விருச்சிகம்) (கார்த்திகை) விசாகம் 1/4 அனுஷம் கேட்டை	ஐப்பசி (துலாம்) சித்திரை 1/2 சுவாதி விசாகம் 3/4	(கன்னி) உத்திரம் 3/4 அஸ்தம் சித்திரை 1/2 (புரட்டாசி)

சிம்மராசியிலுள்ள சந்திரனும் குருவும் தங்களுக்கு ஏழாம் இடத்திலுள்ள சூரியனைப் பார்க்கின்றனர். அதே சமயத்தில் சூரியன் குருவையும் சந்திரனையும் பார்க்கிறான். மாசி மாதம் 1-ஆம் நாளில் சூரியன் இராசியில் இருக்கிறது. இருப்பு 4 நாழிகை 17 விநாடி ஆகும். அஃதாவது சூரிய உதயத்திலிருந்து 4 நாழிகை 17 விநாடி. மகாமக நாளாகிய மாசிமாதம் 6-ஆம் தேதி சூரிய உதயத்திலிருந்து 3

நாழிகை 43 விநாடிகள் வரையில் கும்பராசி இருக்கிறது. இதுவே கும்பலக்கினம் எனவும் சொல்லப்படும். முன்னமே குறிப்பிடப்பட்டவாறு மாசி மாதம் 6-ஆம் நாள் மகம் 49.25 நாழிகை அஃதாவது இரவு 2.20 மணி வரையில் இருக்கிறது.

7. கும்பேசுவரரை வழிபட்டவர்கள்

பிரமதேவன்

பிரமதேவரின் படைப்புத் தொழில் நிறைவேறச் சிவபெருமான் திருவருளால் அமுதக்கும்பத்திலிருந்து அமுதம் வழிந்தோடிப் பரவிய புனித தலத்தில் அப்பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றவர்கள் பலர். அவர்களுள் முதன்மை யானவராக விளங்குபவர் பிரமதேவர். தமது படைப்புத் தொழிலைப் புரிய உதவிய பெருமானைப் பிரமதேவர் போற்றி வழிபட்டார். பெருமானுக்கும் தேவியருக்கும் திருவிழா நடத்த எண்ணினார். மாசி மாதத்தில் பூர்வ பட்சத்தில் வரும் அசுவினி நட்சத்திரத்தில் கொடியேற்றிப் பெருமானையும் தேவியையும் வாகனங்களில் எழுந்தருளச் செய்தார். 'எட்டு நாள்கள் வரையில் காலையிலும் மாலையிலும் கற்பகம், பூதம், சந்திரன், இடபம், மலை, தேர், குதிரை முதலிய வாகனங்களில் எழுந்தருளச் செய்தார். ஒன்பதாவது நாளில் மேருமலை போன்ற தேர்களைச் செய்வித்து அவற்றில் பஞ்சமூர்த்திகளையும் எழுந்தருளச் செய்தார். தேரில் உலா வரும் போது மக்கள் அனைவரும் தரிசனம் செய்து இன்புற்றார்கள். பத்தாவது மக நாளில் பஞ்ச மூர்த்திகளையும் பல வாகனங்களில் புறப்படச் செய்து மகாமகத் தீர்த்தத்தில் தீர்த்தம் கண்டருளும் விழாவை நடத்தி வைத்தார்.

பிரமதேவனைத் தொடர்ந்து வழிபட்டவர்கள்

சண்டி என்பவன் கூடா ஒழுக்கம் மேற்கொண்டு பல பாவங்களைச் செய்த பின்னர் இங்கு வந்து மகாமகத் தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபட்டு நற்பேறு பெற்றான்.

சுதர்மன் என்னும் அந்தணன் அகத்தியர் மாணாக்கர் குசிதரின் அறிவுரைக்கு ஏற்ப இத்தலத்திற்கு வந்து வழிபட்டு நலம் பெற்றான்.

கேகய நாட்டை ஆண்டுவந்த ***கிருதவீரியன்*** மகப்பேறின்றி வருந்திய சமயம் சாகல்ய முனிவன் அவருக்கு அறிவுரை கூறி இத்தலத்திற்கு வந்து நீராடி வழிபாடு ஆற்றுமாறு கூறினார். இவ்வாறு அவன் இத்தலத்துக்கு வந்து நீராடி வழிபாடாற்றிப் புதல்வன் ஒருவனைப் பெற்றெடுத்து வாழ்ந்து முக்தி நிலையடைந்தான்.

கலிங்கதேசத்து அரசன் ***வீரவர்மன்*** என்னும் மன்னனின் மனைவி கண்ணிலாக் குழந்தையைப் பெற்றுக் கவலையடைந்து நின்றபோது, இத்தலத்திற்கு வந்து வழிபாடாற்றி வருமாறு அவனுக்குச் சாண்டில்ய முனிவர் அறிவுரை வழங்கினார். அவன் அவ்வாறு செய்து நற்புதல்வனைப் பெற்றான்.

தர்மவாகு என்பவனுடைய மனைவி சுலோசனை வேதாளத்தால் பீடிக்கப்பட்டு, துன்புற்ற போது காக்கிய முனிவர் அறிவுரைக்கேற்ப அங்குக் கங்கையில் நீராடினார்கள். அந்நாள் மக நட்சத்திர நாளானதால் கும்பகோணத்திற்கு வந்து மகாமகக் குளத்தில் நீராடினார்கள். பின்னர் அதன் பயனாகத் தர்மவாகு என்னும் புதல்வனைப் பெற்றார்கள்.

எக்கிய சீலன் மகன் **ஞானவான்** தன் தந்தையின் அறிவுரையைப் பெற்றுக் கந்தர்வர்கள் தந்த அறிவுரைக்கேற்ப இத்தலத்திற்கு வந்து நீராடி இறைவனின் அருளைப் பெற்றான்.

மன்னன் **சுவர்ணரோமன்** தன் மனைவியோடு தீர்த்த யாத்திரை செய்தபோது அவன் நாட்டைப் பகைவர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அப்போது சௌகரின் உபதேசத்திற்கு ஏற்பக் கும்பகோணத்திற்கு வந்து நீராடி வழிபட்டு வாட்படை பெற்றுப் பகைவர்களை வென்று நாட்டை அவர்களிடமிருந்து மீட்டு ஆட்சிபுரிந்து நற்பேறு பெற்றான். இவ்வாறு தம்மை அன்புடன் வழிபடும் அடியவருக்குச் சிவபெருமான் தொடர்ந்து அருள்புரிந்து வருகிறார்.

மூர்க்க நாயனார்

இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள திருவேற்காட்டிலே தோன்றி அடியார் வழிபாட்டிலும் அவர்களுக்கு அமுது செய்வித்தலிலும் தம் பொருள் முழுதையும் செலவு செய்து மேலும் தாம் அப்பணியை இடைவிடாது செய்துவரப் பொருள் இன்மையால், தாம் பயின்ற சூதாட்டத்தால் பொருள் தேடியாயினும் இப்பணியைச் செய்து வருவோம் என்று எண்ணிக் கும்பகோணத்தினை அடைந்தார். தாம் எண்ணியவாறே சூதாடிப் பொருள் தேடி அடியார்களுக்கு அமுது செய்வித்து வந்தார். இவ்வாறு சிலகாலம் கும்பகோணத்தில் பொருள்தேடி சிவபுண்ணியத்தில் சிவபதமடைந்தார்.

பரம்பரையினர். அவர் தம் அரசாட்சியை மைந்தரிடம் ஒப்புவித்துவிட்டுப் பல தலங்களுக்கும் சென்று சிவ வழிபாட்டில் திளைத்தார். இவரும் குடமூக்குத் தலத்துக்கு வந்து சிவபெருமானை வழிபட்டார்.

சேக்கிழார்

சேக்கிழார் தொண்டை நாட்டில் பிறந்து சோழமன்னர் அமைச்சராய்ப் பணியாற்றிய காலத்திலே பெரியபுராணம் பாடினார். இவர் வாழ்ந்த காலம் (கி.பி. 1113-1150). இவர் குடமூக்குக் கும்பேசுவரரைப் பற்றித் தாம் இயற்றிய திருஞானசம்பந்தர் புராணத்திலும் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும் மூர்க்க நாயனார் புராணத்திலும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

அரசூர் சொக்கப் புலவர்

அரசூர் சொக்கப்புலவர் தொண்டை நாட்டில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின்பிற்பகுதியிலும் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் கும்பகோணம் கும்பேசுவரரைப் பற்றிப் பாடியுள்ளார்.

அகோரமாதவர் என்பவர் கும்பகே ண புராணம் இயற்றியுள்ளார்.

அருணகிரிநாதர்

அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் தோன்றியவர் இத்தலத்துச் சோமேசம் கீழ்க்கோட்டம் முதலிய தலங்களிலுள்ள முருகப்பெருமான் மீது பாடிய திருப்புகழ்கள் பத்து.

மகாவித்துவான்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பிற்காலத்துக் கம்பர் எனப் போற்றப் பெற்றவர். இவர் திருக்குடந்தைப் புராணம், மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ், குடந்தைத் திரிபந்தாதி ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

தியாகராச செட்டியார்

தியாகராச செட்டியார் குடந்தை அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தவர். இவரும் மகாமகோ உபாத்தியாய சுவாமிநாத அய்யரும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய திருக்குடந்தைப் புராணத்தைச் சுபானு ஆண்டில் வெளியிட்டார்கள்.

முருகேசம்பிள்ளை

யாழ்ப்பாணம் முருகேசம்பிள்ளை 90 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவர் குடந்தைச் சிலேடை வெண்பா இயற்றியவர்.

குடந்தையில் தமிழாசிரியராக இருந்த வி. சாமிநாத பிள்ளை மங்களாம்பிகை மாலை இயற்றினார்.

8. மூர்த்தங்கள்

கோயிலுக்கு வெளியில் இருப்பது தேரோடும் வீதி. இதனை அடுத்து இக்கோயிலின் மூன்றாம் பிராகாரம் கிழக்கிலுள்ள இராசகோபுரத்தை அடுத்து உட்புறத்தில்

உள்ளது. இப்பிராகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் தலமரமாகிய வன்னிமரத்தின் அடியில் ஒரு மேடையின் மீது விநாயகப்பெருமான் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளி யுள்ளார்.

இனிப் பிராகாரத்தில் வலம் வரும் போது தெற்குப் பிராகாரத்தின் மேற்குக்கோடியிலுள்ள சந்நிதியில் விநாயகர் கிழக்கு நோக்கியவாறு வீற்றிருப்பதைக் காணலாம். இவர் ஆதி விநாயகர் எனவும் குறிப்பிடப்படுகிறார். இச்சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத்தின் உச்சியில் கும்பமுனிவர் சுதையுருவத்தைக் காண்கிறோம். மேற்குப் பிராகாரத்தின் மையத்தில் மேற்குக் கோபுரத்தை நோக்கியவாறு குமரப்பர் சந்நிதி காணப்படுகிறது. குமரப்பர் சந்நிதியின் முன்புறம் யானையின் உருவமும் பலிபீடமும் உள்ளன. இச்சந்நிதி வாயிலின் வடபுறம் இடும்பன் திருவுருவம் தெற்கு நோக்கியவாறுள்ளது.

வடமேற்குக்கோடியில் சிறுசந்நிதியில் ஆதிலிங்கம் கிழக்கு நோக்கியவாறு விளங்குகிறது. பின்னர் வலம் வந்து இரண்டாம் பிராகாரத்திற்குச் செல்லும்முன் கிழக்கு கோபுரவாயிலின் முன்னே தென்புறம் முற்றவெளி விநாயகர் சந்நிதியும் வடபுறம் பாலதண்டாயுதபாணி சந்நிதியும் இருக்கின்றன. அடுத்து உள்ளே நுழைந்ததும் வடபுறம் இலட்சுமிநாராயணப் பெருமாள் சந்நிதி தெற்கு நோக்கியவாறு அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

பின்னர்க் கவசமிடப்பெற்ற கொடிமரத்தைக் காணலாம். கொடிம்ரத்தின் அடிப்பகுதியில் விநாயகரின் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. கொடிமரத்தையடுத்து உள்ளே சென்று பலிபீடம், நந்திதேவர் திருவுருவம் ஆகியவற்றைக் காணலாம். பலிபீடத்தின் அடிப்பகுதியில் நான்கு புறங்களிலும் நந்திதேவரின் நான்கு திருவுருவங்கள்

காணப்படுகின்றன. இவற்றை அடுத்து முதற் பிராகாரத்திற்குச் செல்லுமுன் கயிலாசகோபுர வாயிலின் தென்புறம் இருபுறமும் நாகர் திருவுருவங்கள் இருக்க வல்லபை கணபதி காட்சியளிக்கிறார். இத்திரு-வுருவங்களுக்குச் சற்று வடக்கில் நவக்கிரகங்களின் திருவுருவங்கள் ஒரு மேடைமீது நிறுவப் பெற்றுள்ளன.

அடுத்துக் கயிலாச கோபுரவாயில் வழியாக உள்ளே சென்று முதல் பிராகாரத்தின் தென்கிழக்கிலுள்ள அறுபத்துமூவரின் உற்சவர் திருமேனிகளைக் காணலாம். தெற்குப் பிராகாரத்தில் பிரதோடநாயகர், அம்மன், நடராசர், அத்திரதேவர், விநாயகர், சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானை ஆகியோர் உலாத்திருமேனிகளும் அடுத்துப் பதஞ்சலி. நால்வர், வியாக்கிரபாதர், சேக்கிழார், அறுபத்துமூவர், வீரபத்திரர், சப்தகன்னியர், அட்டலிங்கங்கள், விசாலாட்சியம்மன், காசிவிசுவநாதர் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. தெற்குப் பிராகாரத்தில் கருவறைக்குத் தென்புறம் சோமாசுகந்தர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இச்சந்நிதியில் சோமாசுகந்தர், தனியம்மன் ஆகிய உற்சவத் திருமேனிகள் காட்சியளிக்கின்றன

தென்மேற்குப் பகுதியில் வலஞ்சுழி விநாயகர் கிழக்கு முகமாகத் தனிச் சந்நிதியில் காட்சியளிக்கிறார். மேற்குப் பிராகாரத்தில் பிட்சாடனர், ஸ்ரீலிங்கம், மகாலிங்கம். சதாசிவலிங்கம் ஆகியோர் திருவுருவங்களும் வள்ளி தெய்வயானையுடன் சண்முகர் உற்சவர், வள்ளி தெய்வயானையுடன் கார்த்திகேயர் ஆகியோர் சந்நிதிகளும் அடுத்துத் தேஜோலிங்கம். அட்சயலிங்கம், கோடிலிங்கம் ஆகியோர் சிவலிங்கத்திருமேனிகளும் அன்னபூரணி, கசலட்சுமி, மகாலட்சுமி. சரசுவதி ஆகியோர் திருவுருவங்களும் காட்சி அளிக்கின்றன.

வடக்குப்பிராகாரத்தில் மங்களாம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இச்சந்நிதி சற்று உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தம்மை அன்போடு வழிபடுவோர்க்குத் திவ்விய மங்களத்தை அருளும் மாட்சிகாரணமாக இத் தேவியருக்கு மங்களாம்பிகை என்னும் பெயர் அமைந்துள்ளது. சத்திபீடங்களுள் ஒன்றான மந்திரப் பீடத்தில் விளங்குவதால் இவ்வம்பிகை மந்திரபீடேசுவரி என்னும் பெயரும் மந்திரபீட நலத்தள் என்னும் பெயரும் தாங்கி வருகிறாள். அம்மன் சந்நிதி வாயிலில் இருபுறங் களிலும் ஜெயா, விஜயா என்னும் துவாரபாலகியரின் திருவுருவங்கள் உள்ளன. அம்மன் சந்நிதி புறக்கோட்ட மாடங்களில் முறையே கௌரி, கங்கா, அம்பிகை, கானாம்பிகை, உமா ஆகியோர் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. அம்மன் சந்நிதிக்குச் சற்றுத் தென்கிழக்கில் சண்டேசுவரர் தெற்குமுகமாக அமர்ந்துள்ளார்.

வடக்குப்பிராகாரத்தின் மையத்தில் நவநீதிவிநாயகர் கிழக்கு நோக்கியவாறு வீற்றிருக்கிறார். வடக்குப் பிராகாரத்தின் கிழக்குக்கோடியில் கிராதமூர்த்தி நின்ற நிலையில் வில், அம்பு ஆகியவற்றை ஏந்தியவாறு தெற்குநோக்கிக் காட்சியளிக்கிறார். கிழக்குப்பிராகாரத்தில் வயிரவர், கால வயிரவர், சுரகரேசுவரர், சாஸ்தா, சிவலிங்கம் கோவிந்ததீட்சிதர் பத்தினி நாகமாம்பாள் ஆகியோர் திருவுருவங்களும் சற்றுத் தெற்கில் சந்திரன், சூரியன் ஆகியோர் திருவுருவங்களும் மேற்கு நோக்கியவாறு காட்சியளிக்கின்றன.

பின்னர்க் கருவறை முன்மண்டபத்தின் தெற்குப் பகுதியிலுள்ள படிகளின் வழியே செல்லும்போது வாயிலின் தென்புறம் சபை விநாயகர் திருவுருவத்தையும் வடபுறம் காசிவிசுவநாதர், நந்திதேவர் ஆகியோர் திருவுருவங்களையும்

காண்கிறோம். முன்மண்டபத்தின் வடபுறம் நடராசர், சிவகாமி ஆகியோர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

மகாமண்டபத்தில் கண்ணாடி, பித்தளை உலோகத்தில் வடிக்கப்பட்ட நந்திதேவர் திருவுருவம், பலிபீடம், நந்திதேவர் திருவுருவம் ஆகியவை கருவறையை நோக்கியவாறுள்ளன. கருவறை வாயிலின் தென்புறம் ஆறுகால கணபதி கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். கருவறை வாயிலின் இருபுறங்களிலும் டண்டி, முண்டி என்னும் இரு துவார பாலகர்கள் காவல்புரிகின்றனர். கருவறையில் கும்பேசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு எழுந் தருளியுள்ளார். கும்பேசுவரர் சிவலிங்கத் திருமேனி சற்றுப் பருத்துள்ளது. பாணம் சிறிது சாய்ந்துள்ளது. திரு மேனி மணல் இலிங்கமாதலால் தங்கக்கவசம் சார்த்தப்பட்டுள்ளது. புனுகுச்சட்டம் திருமேனியின் மீது இடப்படுகிறது. பாணத்தில் உச்சி, கும்பத்தின் வாயைப் போல் காட்சி அளிக்கிறது. இவருக்கு அமுத கும்பேசுவரர், அமுதேசர் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. வேறு பற்பல சிவலிங்கங்கள் தோன்றுவதற்கு அமுதகும்பம் காரணமாக இருந்ததால் இக்கும்பம் ஷேத்திர பீஜ கும்பம் என்னும் பெயர் பெற்றுள்ளது.

கும்பேசுவரர் சுவாமி திருமஞ்சன வீதியிலுள்ள வராகக் குளக்கரையின் வடமேற்கு மூலையில் கரும்பாயிர விநாயகர் கோயில் இருக்கிறது. இக்கோயிலுக்கு ஒரு வரலாறு உள்ளது. கும்பேசுவரரை வழிபட வந்த முனிவர்களுடன் கரும்பு வியாபாரி ஒருவர் ஆயிரம் கரும்புகளுடன் வராகக் குளக்கரையில் தங்கினார். அங்கு எழுந்தருளிய விநாயகர் சிறுவன் உருவம் கொண்டு வந்து தனக்கு ஒரு கரும்பு வேண்டு மென அவ்வியாபாரியிடம் தெரிவித்தார். அவ்வியாபாரி அவருக்குக் கரும்பு கொடுக்க மறுக்க, விநாயகர் ஒரு கரும்பைப் பிடித்திழுத்தார். இச்செயலைக் கண்ணுற்ற

வியாபாரி சீற்றங்கொண்டு அவரை அடிக்கத் துரத்திக்கொண்டு சென்றார். அப்போது அச்சிறுவன் அவ்விநாயகர் கோயிலுக்குள் ஓடி மறைந்துவிட்டான். பிறகு வியாபாரியின் ஆயிரம் கரும்புகளும் சாரமற்றுச் சக்கையாகிவிட்டன. இதையறிந்த வியாபாரி வருந்தி, விநாயகரிடம் முறையிட்டார். அப்போது விநாயகர் கரும்புகளுக்கு மீண்டும் சாரத்தைக் கொடுத்தார். இவ்விநாயகரே கரும்பாயிர விநாயகர் என்னும் பெயரில் அழைக்கப்பெறுகிறார்.

9. தீர்த்தங்கள்

கும்பகோணம் நகரின் மையத்தில் கண்ணைக் கவரும் காட்சிகளுடன் சுற்றிலும் பல மண்டபங்களுடன் விளங்கும் திருக்குளம் மகாமகத் தீர்த்தக்குளமாகும். இதன் பரப்பளவு 20 ஏக்கர் ஆகும். இக்குளத்திற்கு வடபுறத்தில் காசி விசுவநாதர் கோயில் உள்ளது. அமுத கும்பத்திலிருந்து வழிந்தோடிய தீர்த்த அமுதத்தின் ஒரு பகுதி தென் திசையில் தங்கியிருந்தது. அதுவே மகாமகத் தீர்த்தம் ஆகும்.

கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சரசுவதி, காவிரி, குமரி, பயோடினி, சரயு ஆகிய ஒன்பது நதிகளின் தேவதைகளான நவகன்னியர்களும் எண்ணிறந்த மக்களும் இங்கு வந்து நீராடினர். நவகன்னியரின் சிலைகள் காசி விசுவநாதர் கோயிலில் உள்ளன. மகாமக நாளில் கங்கை முதலிய நதிகள் முழுவதும் சேருகின்றன என்பது நம்பிக்கையாகும். இக்குளத்திற்கு அமுதபாவி, கன்னியர் தீர்த்தம், அமுதத்தீர்த்தம், பாவநாசத் தீர்த்தம் முதலிய பெயர்களும் அமைந்துள்ளன.

இப்போது இக்குளம் மகாமகக்குளம் என்றழைக்கப் படுகிறது. இக்குளத்திற்கு நீர்வரத்து நகருக்கு இருபுறமுமுள்ள காவிரியாறு, அரசலாறு ஆகியவற்றிலிருந்து வருகிறது. இக்குளத்தின் நாற்புறங்களிலும் சிவலிங்கங்களைக் கொண்ட பதினாறு சந்நிதிகள் முன்மண்டபத்துடன் விளங்குகின்றன. இம்மண்டபங்களின் மீது அழகிய விமானங்கள் கட்டப்பட்டுள்ளன. இச் சந்நிதிகளிலுள்ள சிவலிங்கங் களுக்குப் பற்பல பெயர்கள் வழங்கிவருகின்றன. இக்குளத்தின் வடக்குக்கரையில் பிரம்ம தீர்த்தேசுவரர், முகுந்தேச்சுரர், தனச்சுரர், இடபேச்சுரர் ஆகியோர் மேற்கு நோக்கியவாறும் குளத்தின் வடகிழக்குக் கோடியில் பாணேச்சுவரர் தென்மேற்குத் திசையை நோக்கியும் இக்குளத்தின் கிழக்குக்கரையில் கோணேச்சுவரர் தென்மேற்குத் திசையை நோக்கியும் இக்குளத்தின் கிழக்குக்கரையில் கோணேச்சுரர், குணேச்சுரர் ஆகியோர் மேற்குநோக்கியும் தென்கிழக்குக் கோடியில் பைரவேச்சுரர் வடமேற்குத் திசையை நோக்கியும் தெற்குக்கரையில் அகத்தீச்சுரர், வியாசேச்சுரர், உமாபாகேசர் ஆகியோர் கிழக்கு நோக்கியவாறும் குளத்தின் வடமேற்குக் கோடியில் சேத்திரபாலேசர் வடகிழக்குத் திசையை நோக்கியவாறும் காட்சியளிக்கின்றனர். சேத்திரபாலேசர் சந்நிதி முன் மண்டபத்தில் விநாயகரின் திருவுருவம் நிலைப் படுத்தப்பெற்றுள்ளது.

மகாமகக் குளத்தில் சேரும் தீர்த்தங்களாவன:

பிரமதீர்த்தம் 1, திக்குப்பாலகர்களின் தீர்த்தம் 8, நதிமடந்தையர்களின் தீர்த்தம் 9, தேவராதியோர் அறுபத்தாறு கோடி தீர்த்தம் ஆகியவை.

அவற்றின் விவரம் பின்வருமாறு:-

1. இந்திர தீர்த்தம், 2. அக்கினி தீர்த்தம், 3. இயம தீர்த்தம், 4. நிருதி தீர்த்தம், 5. வருண தீர்த்தம், 6. வாயு தீர்த்தம், 7. குபேர தீர்த்தம், 8. ஈசான தீர்த்தம், 9. பிரம தீர்த்தம், 10. கங்கை, 11. யமுனை, 12. கோதாவரி, 13. நருமதை, 14. சரசுவதி, 15. காவிரி, 16. குமரி, 17. பயோடினி, 18. சரயு, 19.அறுபத்தாறுகோடி தீர்த்தம்.

இத்தனை தீர்த்தங்களும் அமைந்த மகாமகக்குளத்தில் மாசிமக நாளில் நீராடிக் கும்பேசுவரர் முதலிய மூர்த்திகளை வழிபடுபவர் பற்பல பேறுகளைப் பெற்று இம்மையிலும் மறுமையிலும் இன்பம் அடைவர்.

காசிப தீர்த்தம்

இத்தீர்த்தம் கும்பேசுவரர் கோயிலுக்கு நேர் வடக்கே அமைந்துள்ளது. இது முற்காலத்தில் காசிபரால் அமைக்கப்பட்டதால் இப்பெயர்பெற்றது என்பர். காசிபர் காவிரி ஆற்றின் கரையிலிருந்து மங்களநாயகியை நினைத்துத் தவம் செய்துகொண்டிருந்தார். அவர் தவத்திற்கு மெச்சிய கும்பேசுவரர் "நீர் தவம்செய்து கொண்டிருந்த தீர்த்தம் நும் பெயராலேயே காசிப தீர்த்தம் என விளங்கட்டும்" என்றருளினார்.

ஈசான தீர்த்தம்

கும்பகோணத்தின் வடகிழக்கில் காவிரி ஆற்றின் கரையோரத்தில் அமைந்திருப்பது ஈசான தீர்த்தமாகும். நாகேசுவரர் சந்நிதிக்கு நேர் வடக்கே காவிரியின் கரையில் இத்தீர்த்தம் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது என்பர்.

மங்களகூப தீர்த்தம்

இது கும்பேசுவரர் கோயிலினுள் இராசகோபுரத்திற்கு வடமேற்கில் அமைந்துள்ளது. இதற்குக் கந்தகூபம் என மற்றொரு பெயரும் உண்டு. முற்காலத்தில் கந்தவேல், கும்பேசுவரரையும் மங்கள நாயகியையும் வழிபட வேண்டும் எனக் கருதி இங்கு வந்து தீர்த்தம் உண்டாக்கித் தரவேண்டும் என மங்களநாயகியிடம் விரும்பி வேண்ட அவரும் தமது விரல் நகத்தால் கீறி இங்கே ஒரு தீர்த்தம் அமைத்துக்கொடுத்தார். இதில் முருகக் கடவுள் நீராடி அக் கும்பேசுவர சுவாமியையும் மங்கள நாயகியையும் வழிபட்டுச் சூரபதுமன் முதலிய அசுரர்களை வென்றார். இத் தீர்த்தத்திற்கு மங்கள சிவகங்கை என்னும் பெயரும் உண்டு. தற்போது இது திருக்குளம் என வழங்கப்பெற்று வருகிறது.

காமதேனு தீர்த்தம்

காமதேனு கும்பேசுவரர் கோயிலுக்கு வடக்கே ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி கும்பேசுவரரை வழிபட்டது. இதற்குக் காமதேனு தீர்த்தம் என்னும் பெயர் அமைந்தது.

மாசிமாதத்தில் ஆதிகும்பேசுவரருக்கு நடைபெறும் பெரு விழாவின் பத்தாவது நாளாகிய மகாமக நாளில் பெருமான் பஞ்ச மூர்த்திகளோடு புறப்பட்டு மகாமகக் குளத்திற்கு வந்து தீர்த்தங்கண்டருளுவார். பங்குனி மாதத் தெப்பத்திருவிழா இங்கு நடைபெறுகிறது. அப்போது நாகேசுவரர் கோயில் மூர்த்தியும் இக்குளத்தில் உள்ள மண்டபத்தில் தங்கித் தீர்த்தம் காண்பார்.

இந்நகரின் 14 தீர்த்தங்களில் தடாகங்கள் ஏழு, கிணறுகள் 3, காவிரித் துறைகள் 4 எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

கும்பேசுவரர் கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் தென்கிழக்குக்கோடியில் ஒரு கிணறும் முதற்பிராகாரத்தில் கருவறைக்கு வெளியே வடக்கே ஒரு கிணறும் உள்ளன.

10. நவகன்னியர் அருச்சனை

கங்கை - திரியதகை, தேவி, சீமதி, சானவி, விட்டுமமதா, உலோகமாதா, சுவர்த்துனி, மேரு சம்பவை, திரிலோசனை, சடோற் பூதை, சக்கதாரா, சுபாவகை.

யமுனை - சூரியசம்பூதை, காளிந்தி, யம சுவசா, சுத்தை, தாமதை, சாந்தை, அனந்தை, சுபாங்கினி, வசுப்பிரணா, வசுமதி, வசுப்பிரீதை.

சரசுவதி - சாந்தரூபை, சமரூபி, சமப்பிரதை, ஞான வயிராக்கியதை, ஞானரூபி, அஞ்ஞான விபேதினி, மேரு கோடரசம்பூதை, மேகநாதானுவர்த்தனி, பிரதீசி, சண்ட வேகாட்டியை, மாயா விச்சேதகாரிணி.

நருமதை - சோமோற்பவை, சேரமழுகி, சோம சேகரப்பிரியை, மருமரூபி, சமர்மார்த்தனி, தரிசனி, சுப்பிரபை, சுலபை, புண்ணியை, இரேவைமேகல கன்னிகை, சுருவக்கியை.

காவேரி - விதிசம்பூதை, கலியாணி, காமதாயினி, கலியாண தீர்த்த ரூபி, சையாசவஉற்பவை, உலோபாமுத்திரா, சுவசாய்யாமா, கும்ப சம்பவ வல்லபை, விண்டுமாயை, சோளமாதா, தக்கணா பத சானவி.

சிந்து - கன்னியா நதி, தேவி, கனகாயை, கரூச்சை,

கலாவதி, காமதை, காமப்பிரிய வரப்பிரதை, காளி, காமப்பிரதை, காலதாயினி, கடாகவை.

கோதாவிரி - கோதை, கவுதமவ நாசினி, சத்த ஸ்ரோகை, சத்தியவதி, சத்திய ரூபி, சுவாசினி சுலபை சூக்கும தேகாட்டியை, வேகாவர்த்தை, மலாமகை, பக்தவிட்டதை.

சரயு - சண்ட வேகாட்டியை, இட்சுவாகு குல வல்லபை, ராமப்பிரியை, சுபாராம தடத்து வயவிராசிதை, சரப்பிர விருத்தை, எக்யாங்கை, எக்கிய பவ தாயினி, சீரங்க வல்லபை, மேகதாயினீ, பூரண காமதை, பத்தவிட்ட தான சவுண்டிரை.

தாமிரபரணி - பாப தாரிணி, பாலகை, பரி மோதினி, பூரணை, பூர்ணவதி, மோகை, மோகாவதி, சுமை சுந்தர் வேகவதி, வேகை, சர்வேச் சிற்பலப் பிரிதை.

11. மகாமகத் தீர்த்தங்கள் அளிக்கும் பலன்கள்

தீர்த்தம்		பலன்
1.	66 கோடி தீர்த்தம்	துன்பம் நீங்க இன்பம் கைகூடும்.
2.	கங்கை தீர்த்தம்	கயிலைப்பதவி அளிக்கும்.

3.	பிரம தீர்த்தம்	பிதிர்க்களைக் கரையேற்றும்.
4.	யமுனைதீர்த்தம்	பொன்விருத்தி உண்டாகும்.
5.	சிந்து தீர்த்தம்	கல்வியை அளிக்கும்.
6.	குபேரன் தீர்த்தம்	சகல செல்வங்களும் உண்டாகும்.
7.	நருமதை தீர்த்தம்	திடகாத்திரம் உண்டாகும்.
8.	ஈசான்யன் தீர்த்தம்	சிவனடி சேர்க்கும்.
9.	சரசுவதி தீர்த்தம்	ஞானம் உண்டாகும்.
10.	இந்திரன் தீர்த்தம்	வானுலக வாழ்வு அளிக்கும்.
11.	கோதாவிரி தீர்த்தம்	இஷ்ட சித்தி உண்டாகும்.
12.	அக்கினி தீர்த்தம்	பிரமஹத்தி நீங்கும்.
13.	காவிரி தீர்த்தம்	புருஷார்த்தங்களை நல்கும்.
14.	யமன் தீர்த்தம்	யம பயமில்லை.
15.	கன்னியாகுமரி	அசுவமேத பலனைக் கொடுக்கும்.

16.	நிருதி தீர்த்தம்	பூத, பிரேத, பைசாச குற்றம் நீங்கும்.
17.	தாமிரபரணி தீர்த்தம்	கோலோகம் அளிக்கும்.
18.	வருணன் தீர்த்தம்	ஆயுள்விருத்தி உண்டாகும்.
19.	சரயு தீர்த்தம்	மனக்கவலை தீரும்.
20.	வாயு	பிணிகள் அகலும்.

12. கோபுரங்கள்

மூன்றாம் பிராகாரத்தில் முதலில் 9 தளங்களையும் 9 கலசங்களையும் கொண்டு இராசகோபுரம் விளங்குகிறது. அடுத்துத் தெற்குப் பிராகாரத்தில் கோபுரம் கட்டப்பெறாத மொட்டைக்கோபுரம் உள்ளது. மேற்குப் பகுதியிலும் வடக்குப்பகுதியிலும் 3 நிலைகளும் 5 கலசங்களும் கொண்ட விமானங்கள் காணப்படுகின்றன. இரண்டாம் பிராகாரத்திற்குள் நுழையுமுன் கட்டராச கோபுரமும் அதனையடுத்து முதற்பிராகாரத்திற்குள் நுழையுமுன் கிழக்குப் பகுதியில் கயிலாய கோபுரமும் விளங்குகின்றன. இக்கோபுரங்கள் அனைத்திலும் எண்ணற்ற சுதைச்சிற்பங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

கருவறை, அம்மன் சந்நிதி, ஆதிவிநாயகர், சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதி மீது விமானங்கள் காணப் படுகின்றன.

13. மண்டபங்கள்

மூன்றாம் பிராகாரத்திற்குச் செல்லுமுன்னரே மண்டபங்கள் தொடங்குகின்றன. இராசகோபுரத்தையும் கட்டராச கோபுரத்தையும் இணைப்பது போன்று ஒரு மண்டபம் நீண்டு காணப்படுகிறது. மூன்றாம் பிராகாரத்தின் வடகிழக்குப்பகுதியில் கல்யாண மண்டபமும் அதற்கருகில் அலங்கார மண்டபமும் அதற்குச் சற்றுத் தெற்கில் நாற்கால் மண்டபமும் காணப்படுகின்றன. இரண்டாம் பிராகாரத்தில் நவராத்திரி மண்டபம் பெரிய அளவில் கட்டப்பட்டுள்ளது. முதற்சுற்றுப் பிராகாரம் முழுவதும் தளமிடப்பட்டுள்ளது. கருவறையின் முன்புறம் முக மண்டபம், முன்மண்டபம், உள்மண்டபம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மங்களாம்பிகை சந்நிதி முன்புறம் முன்மண்டபம் அழகிய முறையில் விளங்குகிறது.

நவராத்திரியின்போது நவராத்திரி மண்டபத்தில் அம்பிகை எழுந்தருள்வார். கல்யாண மண்டபத்தில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது.

14. சிற்பங்களும் ஓவியங்களும்

இக்கோயிலின் 38 மீட்டர் உயரமுள்ள இராச கோபுரத்தில் ஆங்காங்குத் தெய்வங்களின் சுதைச் சிற்பங்களும் கோபுரந்தாங்கிகளின் சுதைச் சிற்பங்களும்

விளங்குகின்றன. தெற்குக் கோபுரம், மேற்குக் கோபுரம், கட்டிராச கோபுரம், கயிலாய கோபுரம் ஆகியவற்றிலும் தெய்வங்களின் சுதைச் சிற்பங்களும் மற்றும் பல்வேறு சுதைச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

கருவறையை அடுத்துள்ள உள்மண்டபத்திலும் அம்மன் சந்நிதி மண்டபத்திலுள்ள தூண்களிலும் பலதிறப்பட்ட சுதைச் சிற்பங்கள் அழகுற விளங்குகின்றன. அம்மன் சந்நிதியின் முன்புறத்திலும் நவராத்திரி மண்டபத்திலுள்ள குதிரைத் தூண்கள் மிகுந்த கலைநயத்துடன் வடிக்கப் பெற்றுள்ளன. நவராத்திரி மண்டபத்தின் மேற்கூரையில் பன்னிரண்டு இராசிகளின் சிற்பங்களும் 27 நட்சத்திரங் களின் சிற்பங்களும் செதுக்கப்பட்டு வண்ணந் தீட்டப்பட்டுள்ளன. இத்தலத்திற்குரிய மகாமகத்தின்போது சிம்மராசியில் சந்திரனும் குருவும் வீற்றிருக்க அந்த இராசிக்கு ஏழாவது இராசியாகக் கும்பத்தில் சூரியன் திகழ்வதைக் கருத்தில் கொண்டு இதனை நினைவு கூருவதற்காக, இங்கு நவக்கிரகங்களின் இராசிச்சக்கரத்தைச் சிற்ப வடிவில் வடித்தார்கள் போலத் தோன்றுகிறது. கொடிமரத்தருகில் காணப்படும் துவாரபாலகர் இருவர் திருவுருவங்களும் கண்களை கவர்வனவாக உள்ளன.

அம்மன் சந்நிதி மண்டபத்தின் பள்ளியறைக்கு எதிரில் மேல்விட்டத்தில் ஆதிகும்பேசுவரரின் வரலாற்றுச் சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் முருகப்பெருமானின் திருவுருவம் அழகியமுறையில் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. இப்பெருமானுக்கு ஆறுமுகங்களும் தனிப்பட்ட முறையில் ஆறு திருக்கரங்களும் உள்ளன. வலப்புறத்து இரு திருக்கரங்களில் வேலாயுதம், வாள், ஆகியவற்றையும் மூன்றாவது அபயத்தையும் இடப்புறமுள்ள மூன்று

கரங்களில் இரண்டு வச்சிராயுதம், கேடயம் ஆகியவற்றையும் மற்றொரு கை வரத முத்திரையையும் கொண்டுள்ளன.

கோயிலில் கண்டெடுக்கப்பெற்ற கல் நாதசுவர வாத்தியங்கள் இரண்டு சிறந்த முறையில் காணப்படுகின்றன.

நவராத்திரி மண்டபத்தின் மேற்பகுதியில் சிம்மங்களின் உருவங்கள் நீண்ட கற்றூணைத் தாங்கிநிற்பன போன்று காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் தெற்குப் பகுதியில் கும்பேசுவரர் கோயில் தலபுராணத்தை விளக்கும் கண்கவர் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

யாகசாலை மண்டபத்தின் முகப்பில் சுவாமி, அம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வயானை ஆகியோர் சுதைச் சிற்பங்கள் வண்ணந்தீட்டப்பெற்று கவினுற விளங்குகின்றன.

பள்ளியறையில் அழகான ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்கு ஆதிலட்சுமி, வீரலட்சுமி, விசயலட்சுமி, கசலட்சுமி, தான்யலட்சுமி, தனலட்சுமி, சந்தானலட்சுமி, மனோன்மணி ஆகியோர் திருவுருவங்கள் தீட்டப் பட்டுள்ளன. இவற்றில் சௌபாக்கிய லட்சுமிக்குப் பதிலாக மனோன்மணி ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. பள்ளியறை பார்வதி, பரமேசுவரி திருவுருவங்கள் அவர்கள் போகியாக இருந்து உயிர்களுக்குப் போகத்தைக் கொடுப்பதை விளக்குகின்றன.

குடந்தைச் சிவனடியார் கூட்டத்தின் எட்டாவது ஆண்டின் நிறைவின் நினைவாகப் பெரியபுராணப் பாடலும் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகப் பாடலும் சலவைக்கல்லில் 31-12-1955-ஆம் நாளில் பொறிக்கப் பட்டுள்ளன.

நவராத்திரி மண்டபத்தின் தெற்குப்பகுதியில் குடமூக்குத் தலபுராணத்தை விளக்கும் ஓவியங்கள் வரிசையாகத் தீட்டப்பட்டுள்ளன. இவ்வரலாற்றுச் சுருக்கம் ஆங்கிலத்திலும் எழுத்துவடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. இதே இடத்தில் திருஞானசம்பந்தரின் திருவெழுக்கூற் றிருக்கை தேர்வடிவில் வண்ணச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தீட்ட உதவியவர் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆவார்.

கருவறை முன்மண்டபத்தின் சுவர்களில் முத்துசாமி தீட்சிதர் துதிகள் எழுதப்பட்டுள்ளன.

15. கல்வெட்டுகள்

இத்தலத்தில் கோயில்கொண்ட கும்பேசுவரர் மீது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்தரும் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளதால் இக்கோயில் அவர்கள் காலத்திலே அமைந்திருக்க வேண்டும். இக்காலம் பல்லவர் காலத்ததாகும்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தாம் தாம் தலைமை நிலை பெற வேண்டும் என்பதற்காகப் பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் கடும் போர்கள் நிகழ்ந்தன. பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 835-860) ஸ்ரீமாறவல்லப பாண்டியனை (கி.பி. 813-862) தெள்ளாற்றங்கரையில் வென்றான். இவன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப் புகழ்பெற்றான். இவன் பாண்டியர்களிடம் கும்பகோணத்தில் தோல்வியுற்றான். இதனை மனத்தில் கொண்ட மூன்றாம் நந்திவரமன் மகன் அபராசிதன், பாண்டியமன்னன்

வல்லபனைக் கும்பகோணத்திற்கு அருகில் ஓடும் அரசலாற்றங்கரையில் வென்றான். ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லப பாண்டியன் மகனான இரண்டாம் வரகுணன் (கி.பி.962-980) கும்பகோணத்திற்கு வடகிழக்கிலுள்ள திருப்புறம்பயத்தில் நிருபதுங்கவர்மன் மகனான அபராசிதனை எதிர்த்தான். அபராசித பல்லவன் தன் சிற்றரசன் பிருதிவிபதியின் உதவியையும் விசயாலய சோழன் மகன் முதல் ஆதித்தன் உதவியையும் கொண்டு, பாண்டியனை வென்றான். இதன் பின்னர்ப் பாண்டியர்கள் தலைநிமிர இயலவில்லை. விசயாலய சோழன் காலத்தில் தலைதூக்கிய சோழப்பேரரசு தஞ்சாவூரைக் கைப்பற்றிக் கொண்டது. பின், இப்பேரரசு வடதிசையில் கங்கையையும் தென்திசையில் இலங்கையையும் குடதிசையில் மகோதையும், குணதிசையில் கடாரத்தையும் தன் எல்லைகளாக்கிக் கொள்ளத்தக்க அளவில் வளம்பெற்று உயர்ந்தது.

இக்காலத்தில் கும்பகோணத்தைச் சிலகாலம் தலைநகராகக் கொண்ட சோழ மன்னன் ஒருவன் கும்பேசுவரர் கோயிலை விரிவாக்கிக் கட்டியிருத்தல் கூடும் என்னும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கோயிலில் சோழர் காலத்துக் கல்வெட்டுகள் பொறிக்கப்படவில்லையெனினும் கும்பேசர் அமுத கும்பத்திலிருந்து வில்வம் விழுந்த இடத்தில் தோன்றிய வில்வனேச்சுரம் கோயில் எனப்படும் நாகேசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுகளை கொண்டு கும்பேசுவரர் கோயில் சூழ்நிலைகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

கண்டராதித்தனுக்கு உரியனவாகக் குறிப்பிடத்தக்க இராசகேசரி கல்வெட்டுகளில் ஒன்று, பாண்டியர் படையின் செலவினங்களுக்காகத் திருக்குடமூக்குச் சபையாருக்கு 3000

கழஞ்சுப்பொன்னை மதுரை கொண்ட முதற்பராந்தகன் தண்டம் விதித்ததையும் உள்ளூர்ச் சபையினர் அரசலாற்றில் தங்களுக்குச் சொந்தமாக இருந்த நிலங்கள் சிலவற்றை விற்றுத் தண்டத்தின் ஒரு பகுதியைக் கட்டின செய்தியையும் குறிப்பிடுகிறது. மூன்றாம் ஆண்டு கல்வெட்டு ஒன்று, திருக்கோயிலில் ஐந்து யோகிகளுக்கும் வேதம் ஓதும் அறிஞர்கள் இருபது பேர்களுக்கும் உணவிடுவதற்காக நிலம் ஒன்றை விற்ற விவரத்தைக் கூறுகிறது. இதே ஆண்டில் பராந்தக மூவேந்த வேளாண் நிலம் ஒன்றை வாங்கிப் பிரபாகருடைய மீமாம்ச தத்துவத்தைச் சொற்பொழிவு செய்துவந்த ஆசிரியர் ஒருவருக்குப் பட்டமேற்பு வழங்கினான்.

இவற்றிலிருந்து தெரியவருவது ஊர்ச் சபையினர் எத்தனை சிறப்பிடம் பெற்று வாழ்ந்தார்கள் என்பதாகும். இக்கோயிலின் மிகப் பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் சில கண்டுபிடிக்கப்பட்டன.

1. "சாலிவாகன சகாப்தம் (1722) ரெளத்திரி ஆண்டு ஸ்ரீஆசார்யஸ்வாமிபி; நிர்மத: ஸ்ரீ காஞ்சி பீடாபிஷித்த ஸ்ரீ மஹாதேவேந்தரயதிஉபயம்." இக்கல்வெட்டு கொடி மரத்துக்குத் தென்புறமுள்ள தூணில் உள்ளது. கொடிமரத்திற்கு வடபுறத்திலுள்ள தூணில் இக் கல்வெட்டின் செய்திகள், தெலுங்கு மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

2. "சாலிவாகன சகாப்தம் (1722) துன்மதி ஆண்டு கும்பேசுவரசுவாமி சோமாசுகந்த மூர்த்திக்குக் கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், மூடுன்னு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சந்திர மெளளீஸ்வர தாஸபூத ஸ்ரீ மகா தேவந்த்ரயதி தர்மம்." இது சோமாசுகந்தமூர்த்தி கோயிலுள் அர்த்த

மண்டபத்துத் தென்புறத்தில் உள்ளது.

3. "விக்கிர வருடம் ஆடிமாதம் 21 செவ்வப்ப நாயக்க ஐயன் தர்மமாக திருவிலந்துறை புத்தர் கோயிலில் சித்தமாரமர்த்தார் நாயகர் நிலத்திலே திருமலை கோபுரப் பிரகாரங்கள் விசேஷ மகா ஜனங்கள் வாக்காலே வேண்டிக் கொள்ள திருப்பணி முடிந்தது."

இது கயிலாய கோபுரவாயிலின் தென்புறம் உள்ளது. மேலும் கிராதமூர்த்திக் கோயிலின் நிலைக் கல்லிலும் பெரிய நந்தியுள்ள இடத்துக்குத் தென்புறமுள்ள அறைக்கதவுகளில் முளைக்கல்லிலும் சிதைந்த கல்வெட்டுகள் உள்ளன.

16. பூசைகளும் திருவிழாக்களும்

இக்கோயிலில் காமிக ஆகமமுறையில் கீழ்க் காணும் காலங்களில் பூசைகள் நடைபெறுகின்றன.

1.	உஷத்காலம்	காலை 7 மணி
2.	காலசந்தி	காலை 9 மணி
3.	உச்சிக்காலம்	பகல் 12 மணி
4.	சாயரட்சை	மாலை 5 மணி
5.	இரண்டாம் காலம்	இரவு 7 மணி
6.	அர்த்தசாமம்	இரவு 8.30 மணி

இக்கோயிலில் பிரதோடம், கிருத்திகை, வெள்ளிக் கிழமைகள், திருவாதிரை முதலிய பஞ்சபருவ விழாக்கள் நடைபெறுகின்றன.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் மகாமக விழாவின் போது மாசிமாதம் பூர்வ பட்சத்தில் வரும் அசுவினி நட்சத்திரத்தில் கொடியேற்றிப் பெருமாளையும் தேவியையும் பல வாகனங்களில் எழுந்தருளச்செய்து எட்டு நாள்கள் காலையிலும் மாலையிலும் கற்பகம், பூதம், சந்திரன், இடபம், மலை, தேர், குதிரை ஆகிய வாகனங்களில் எழுந்தருளச் செய்வர். ஒன்பதாவது நாளில் மேருமலை போன்றுள்ள தேர்களில் உலா வருவார்கள். பத்தாம் நாளில் பஞ்ச மூர்த்திகள் பல வாகனங்களில் சென்று மகாமகக் குளத்தில் தீர்த்தம் காண்பர்.

சித்திரை மாதத்தில் சப்தத்தான விழா நடை பெறுகிறது. அன்றைக்கு ஆதிகும்பேசுவரர் மங்கள நாயகியுடன் அழகுற அலங்கரிக்கப்பெற்ற பல்லக்கில் அமர்ந்து தெற்கே 2 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள சாக்கோட்டை, திருக்கலையனூர், மேற்கே 1 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள தாராசுரம், மேற்கே 2 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள திருவலஞ்சுழி, தென்வடக்கே 4 1/2 கிலோமீட்டத் தொலைவிலுள்ள சுவாமிமலை, வடக்கே 1 1/2 கிலோமீட்டரத் தொலைவிலுள்ள கொட்டையூர் ஆகிய ஏழு தலங்களுக்கும் சென்று ஆங்காங்கே காட்சி அளிப் பார். வைகாசி மாதத்தில் கும்பேசுவரருக்கும் மங்களாம் பிகைக்கும் திருக்கல்யாண விழா நடைபெறும்.

ஆனித்திருமஞ்சனம், தட்சிணாயனம், ஆடிப் பதினெட்டாம் பெருக்கு, ஆடிப்பூரம், பவித்திர விழா ஆவணி மூலம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர் சஷ்டி, கடைமுகம், கார்த்திகைத் திங்கட் கிழமைகள், கார்த்திகை தீபம், மார்கழித் திருவாதிரை, மகரவிதி பாதம், சங்கராந்தி, சிவராத்திரி, அமுதுபடையல் முதலிய விழாக்கள் அந்த அந்தக் காலங்களில் நடைபெறுகின்றன.

பங்குனி மாதத்தில் தெப்போற்சவம் நடைபெறுகிறது.

17. இக்கோயிலின் சமயம், சமுதாயம், கலை, பண்பாடு முதலியவற்றினால் ஏற்பட்ட நன்மைகள்

திருக்கோயில்கள் கல்வியின் நிலைக்கலன்களாகவும் ஏனைய நுண்கலைகளுக்கு மையங்களாகவும் இருந்து வந்தன. கோயில்களே இந்நாட்டுக் கட்டடங்களின் மிகச் சிறந்தவைகளாகத் திகழ்கின்றன. இந்நாட்டில் விளங்கிய சிற்பிகளும் ஓவியர்களும் அடியார்களுக்கு உவகை தரும் வகையில் சிற்பங்களையும் ஓவியங்களையும் வடித்து தந்துள்ளார்கள். சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப் பெற்றன.

இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டும் வகையில் கும்பேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இவ்வூரில் சிவயோகிகளும் வேதங்களில் வல்ல அறிஞர்களும் விளங்கினர் என்பதையும் பிரபாகரருடைய மீமாம்சத் தத்துவத்தைச் சொற்பொழிவு செய்தவர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதையும் பாண்டியன் முடித்தலை கொண்ட பரகேசரிவர்மனான இரண்டாம் ஆதித்தன் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டுகள் குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் காணப்படுகின்றன. இதிலிருந்து தெரியவருவது தத்துவங்கள் அக்காலத்தில் விளக்கம் பெற்றன என்பதாகும். இத்தகைய வரிசை முறையில் இந்நகரில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்களுக்குச் சொந்தமான கிளை மடங்களும்

காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகள் மடமும் வீரசைவ மடமாகிய பெரிய மடம் என்றழைக்கப்படும் ஸ்ரீசாரங்கதேவர் மடமும் பல அற்புதங்களைச் செய்த மௌனசுவாமிகள் மடமும் வைணவ மடங்களின் கிளை மடங்களும் திருவண்ணாமலை ஆதீன மடமும் மத்வர்களுக்குரிய வியாசராயர் மடமும் ஆங்காங்குள்ளன.

இப்போது காவிரிக்கரையில் மிகவும் மனோகரமான காட்சிகளுக்கு இடையில் மிகவும் கீர்த்தி வாய்ந்த கும்பகோணம் அரசு கலைக்கல்லூரி அமைந்துள்ளது. இது "தென்னிந்திய கேம்பிரிட்ஜ்" என்று புகழப்படும் சிறப்புடையது. இங்குச் சாது சேஷய்யர், பூண்டி அரங்கநாத முதலியார், டாக்டர் உ.வே.சாமிநாதய்யர், தியாகராச செட்டியார் முதலிய பேரறிஞர்களும் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள்.

இக்கோயில் ஆதிநிலையில் தோன்றியதாகும். இதன் காரணமாகக் கோயிலின் சுற்றுப்புறங்களிலும் அடுத்துள்ள பகுதிகளிலும் பல கோயில்கள் தோன்றின. இவ்வூரில் 50 கோயில்கள் உள்ளன. மற்றக் கோயில்களைப் போலவே இக்கோயிலில் நடத்தப்படும் பூசைகளும் திருவிழாக்களும் அமைந்திருக்கின்றன. எனினும் இத்திருக்கோயிலுக்குத் தனிப்பட்ட முறையில் உரியதாகிய மகாமகப் பெருவிழாவிற்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து மட்டுமன்றி வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் திரண்டு வருகிறார்கள். இத்தகைய அரிய காட்சி தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாது. இம்மகாமக விழாவிற்கு வரலாற்றிலுள்ள நம் நாட்டின் பல பகுதிகளின் புனித நதிகள் இணைக்கப்படுகின்றன. நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டை இத்திருக்கோயில் நிலைப்படுத்துகின்றது. தமிழகத்திற்கும் தமிழகத்தின் வாழ்விற்கும் தாய்போல் விளங்கும் காவிரிநதி இவ்விழாவில் சிறப்பிடம் பெறு

கிறது. இவையெல்லாம் கும்பேசுவரர் கோயில் அளிக்கும் பேறுகளாகும்.

18. நிருவாகம்

இக்கோயிலின் நிருவாகம் ஆதியில் தேவத்தானக் குழுவின் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு 1938-ஆம் ஆண்டில் ஏற்பட்ட திட்டப்படியும் (பி.ஓ.1113/31-5-1938), பிறகு 1947-ஆம் ஆண்டிலும் 1957-ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட திருத்தப்பட்ட திட்டங்களின்படியும் (பி.ஓ.1277/25-4-1947). (ஓ.ஏ.எண் 141/11-5-1957) சென்னை அறநிலைய ஆட்சித் துறையினர் நேர் நிருவாகத்தில் இருந்து வருகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்பெற்ற நிருவாக அலுவலரும் தக்காரும் கோயில் நிருவாகம் செய்து வருகிறார்கள். இக்கோயிலைச் சார்ந்து கும்பகோணம் மூகாம்பிகை கோயிலும் பாளைய நல்லூர் மாரியம்மன் கோயிலும் உள்ளன.

இக்கோயிலுக்கு 202.51 ஏக்கர் நன்செய் நிலங்களும் 38.19 ஏக்கர் புன்செய் நிலங்களும் 133 கட்டடங்களும் 121 மனைகளும் உள்ளன. சகாயத் தொகை பசலி 1400-இல் வருமானம் 4. 23,575 உருபாயாகும்.

இக்கோயிலில் 27 பணியாளர்கள் அலுவலில் உள்ளனர். இவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தொகை 11,990/- உருபாயாகும்.

இத்திருக்கோயிலுக்கு ஐந்து திருத்தேர்கள் உள்ளன. இவை ஐந்தும் நன்னிலையில் உள்ளன. தேரோட்டம்

ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதத்தில் நடைபெறுகிறது. குதிரை, இடபம் (அம்மன்), இடபம் (சுவாமி), பெருச்சாளி. இக்கோயிலில் யானை ஒன்று பராமரிக்கப்படுகிறது. கோயில் பூசைக்காகக் காவிரியிலிருந்து தீர்த்தக்குடத்தைக் குடைநிழலில் கொண்டு வரும்போது அவருக்கு முன் யானை சென்று புனிதத் தீர்த்தத்திற்குச் சிறப்பு அளிக்கிறது. இந்த யானைக்கு நாளொன்றுக்கு மூன்று படி அரிசி வடித்த சோறு, மிளகு 50 கிராம்; சீரகம் 50 கிராம், 100 எண்ணெய் ஆகியவற்றுடன் பிசைந்து கொடுக்கப்படுகிறது. யானைப் பாகனுக்கு 350 உருபாய் ஊதியமும் யானைக்குத் தழைகள் முதலிய தீனிகளைக் கொண்டுவந்து கொடுப்பவருக்கு 400 உருபாய் ஊதியமும் அளிக்கப் படுகின்றன.

இக்கோயிலுள்ள வெள்ளித்தேரைத் திருப்பனந்தாள் மடத்துக் காசிவாசி தம்பிரான் சுவாமிகள் வழங்கியுள்ளார்.

இக்கோயில் ஒரு நூலகத்தையும் பராமரித்துவருகிறது.

19. திருஞான சம்பந்தர் அருளிய திருக்குடமூக்குத் தேவாரப் பதிகங்கள்

பண் - பஞ்சமம்

அரவிரி கோடனீட லணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவலன் மண மல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழ கன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்த தானவ னெம்மிறையே. (1)

துண்டோடு மலர் விரிந்த காந்தள்செடிகள் செழித்து இருப்பதால் அழகுசெய்கின்ற காவிரி ஆற்றின் அருகில் மரா மரங்கள் விரிந்த மலர்களும் முல்லையும் மணத்தையுடைய மல்லிகையும் தேனோடும் உடைய குராமரங்கள் விரிந்த சோலைகள் சூழ்ந்த கும்பகோணம். குடமூக்கு (கும்பகோணம்) செழித்த காந்தள் செடிகள் மணம், மல்லிகை ஆகிய சோலைகள் சூழ்ந்து இருக்கின்றது. காவிரி ஆற்றின் அருகிலுள்ள இருப்பிடமாகக் கொண்டுள்ளவர் இறைவன் ஆவார்.

ஓத்தர வங்களோடு மொலி காவிரி யார்த்தயலே
பூத்தர வங்களோடும் புகை கொண்டடி போற்றிநல்ல
கூத்தர வங்களோவாக் குழ கன்குட மூக்கிடமா
ஏத்தர வங்கள்செய்ய விருந் தானவ னெம்மிறையே. (2)

ஓத்து - வேதங்களின். அரவங்களோடு - ஓசைக ளுடனே. ஓலி-எதிர்ஓலியாக, ஆர்த்து-தானும் ஆரவாரித்து, அயலே - அருகிலுள்ள பூந்தோட்டங்களில், பூத்து - மலர்ந்து இருக்க. (அம்மலர்களையும்) புகை-நறும்புகைகளையும் பிற பூசைத் திரவியங்களும் கொண்டு, அரவங்களோடும் - (சிவ; போற்றி என்னும்) ஓசைகளோடும், திருக்கோயில் வந்து, மெய்யடியார்கள் அடிபோற்றி - திருவடியைப் போற்றி வழிபாடு செய்ய, நல்லகூத்து - நன்மை பயக்கும் கதை தழுவி வரும் கூத்தும் சிறந்த நாட்டியமும் உண்டாக்கும் அரவங்கள், ஓவா - நீங்காத, குடமூக்கு இடமாக, ஏத்து - துதித்தலின், அரவங்கள் செய்ய இருந்தான். பூத்து வினையெச்சத்திரிபு.

மயில்பெடை புல்கியால மணன் மேன்மட
வன்னமல்கும்
பயில்பெடை வண்டுபண்செய் பழங் காவிரிப்பைம்
பொழில்வாய்க்

குயில்பெடை யோடுபாட லுடை யான்குட மூக்கிடமா
இயலொடு வானமேத்த விருந்த தானவ
னெம்மிறையே. (3)

புல்கி - தழுவி, ஆல - ஆட, மல்கும் - நிறைந்திருக்கும், பயில் - தங்கியுள்ள, இயலொடு - முறைப்படி, வானம் ஏத்த.

மிக்கரை தாழவேங்கை யுரி யார்த்துமை யாள்வெருவ
அக்கர வாமையேன மருப் போடவை பூண்டழகார்
கொக்கரை யோடுபாட லுடை யான்குட மூக்கிடமா
எக்கரை யாருமேத்த விருந் தானவ னெம்மிறையே. (4)

அரை - இடுப்பில், மிக்கு - மிகவும், தாழ - தொங்க, வேங்கைஉரி - வேங்கைத்தோலை, ஆர்த்து - கட்டி, அக்கு- அக்குப்பாசி, அரவு, ஆமையோடு, ஏனம் - பன்றியின். மருப்பு - கொம்பு கொக்கரை முதலிய வாச்சியங்களோடு எக்கரையாரும் தீவிலுள்ளவர்களும் ஏத்த இருந்தான். இறைவனுக்குப் புலித்தோல் உடையும் கரித்தோல் போர்வையும் சிங்கத்தோல் ஏகாசமுமாம் என்பர். ஆமை - முதலாகுபெயர். கரை - தீவு. சம்புத்தீவன்றிப் பிற தீவிலுள்ளவர்களும்.

வடிவுடை வாட்டடங்கண் ணுமை யஞ்சவோர்
வாரணத்தைப்
பொடியணி மேனிமூட வுரி கொண்டவன்
புன்சடையான்
கொடிநெடு மாடமோங்கும் குழ கன்குட மூக்கிடமா
இடிபடு வானமேத்த விருந் தானவ னெம்மிறையே. (5)

வடிவுஉடை - அழகிய உருவமுடைய, வாரணம் யானை வாகனத்தை. உரிகொண்டவன் - எரித்தவன்,

இடிபடு- இடியையுடைய. வானம் - வானுலகில் உள்ளவர்களும் ஏத்த இருந்தார். மேக மண்டலம் வானிற் காணப்படுதலால் அதன்கண்படும் இடி, வானத்தின் மீது ஏற்றப்பட்டது. இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றப்பட்டது.

கழைவளர் கவ்வைமுத்தங் கமழ் காவிரி யாற்றயலே
தழைவளர் மாவினல்ல பல வின்கனி கள் தங்கும்
குழைவளர் சோலைசூழ்ந்த குழ கன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையோடு மிருந் தானவ
னெம்மிறையே. (6)

கழை - மூங்கிலினின்று. வளர் - மிகுதியாகக் கிடைக்கும். கவ்வை - பெருவிலையையுடைய, கமழ்கின்ற - கலவைச் சாந்துபூசிய பெண்கள் ஆடிய நீர்த்துறையில் தெறிக்கப்பட்டமையின் முத்துக்களும் கமழ்கின்றன. தழைவளர் - தழைகள் மிகும், தயங்கும் - விளங்கும், குழை - கொழுந்து. இழை - ஆபரணங்கள், வளரும் - மிகும். மாவின் - மாமரத்தின்.

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந் தானெழில்
வையமுய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத் தான்புர
மூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம் வீழ்குட மூக்கிடமா
இலைமலி சூலமேந்தி யிருந் தானவ னெம்மிறையே. (7)

வையம் உய்ய மங்கைபாகம் மகிழ்ந்தான். உலகம் அவன் உருஆகலான், உலகில் இல்லற தருமம் நடத்தற்கு அவன் அம்மையோடு கூடியிருத்தலின் வையம் உய்ய மங்கை பாகம் மகிழ்ந்தான் என்றார். "பெண்பால் உகந்திலனேற்பேதாய் இரு நிலத்தோர் விண்பாலியோ

கெய்திவீடுவர்காண் சாழலோ" என்ற திருவாசகத்தாலும் அறிக. இலைமலி சூலம் - இலைவடிவத்தையுடைய சூலம்.

நெடுமுடி பத்துடைய நிகழ் வாளரக் கன்னுடலைப்
படுமிடர் கண்டயரப் பரு மால்வரைக் கீழடர்த்தான்
கொடுமட றங்குதெங்கு பழம வீழ்குட மூக்கிடமா
இடுமண லெக்கர்சூழ விருந் தானவ னெம்மிறையே. (8)

இடர்கண்டு - துன்பப்பட்டு, அயர - தளர, அடர்ந் தான். கொடும் - வளைந்த, மணல் எக்கர் - மணல் திடல்.

ஆரெரி யாழியானு மல ரானும ளப்பரிய
நீரிரி புன்சடை மே லிரம் பாமதி சூடிநல்ல
கூரெரி யாகிநீண்ட குழ கன்குட மூக்கிடமா
ஈருரி கோவணத்தோ டிருந் தானவ னெம்மிறையே. (9)

ஆர் - பொருந்திய, எரி-அக்கினிபோல் ஒளிரும், ஆழி-சக்கராயுதம் நீர் கங்கைநீர், இரி - வழிந்தோடுகின்ற, கூர்எரி - மிக்க நெருப்புப் பிழம்பு, ஈர் உரி - உரித்த தோல்

மூடிய சீவரத்தார் முது மட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லா நயந் தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடையான்குட மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி யிருந்தானவ னெம்மிறையே. (10)

மூடிய சீவரத்தார் - சீவர ஆடையைப் போர்த்தவர், முது மட்டையர் - மிக்க பேதையராகிய பவுத்தர், மோட்டு அமணர் - இறுமாப்புடைய அமணர். ஏடு அலர் - இதழ் விரிந்த,

வெண்கொடி மாடமோங்கு விறல் வெங்குரு
நன்னகரான்

நண்பொடு நின்றசீரான் றமிழ்ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர்தமிழ் பத்தும் வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடெளிதே. (11)

வெண்கொடி மாடம் ஓங்கும் - புகழின் அடையாளமாக வெண்கொடி கட்டிய மாடம். வெங்குரு - சீர்காழி.

- தருமபுர ஆதீனப் பதிப்பு 1955.

20. திருநாவுக்கரசு நாயனார் அருளிய திருக்குடமூக்குப் பதிகம்

பூவணத்தவன் புண்ணியனன்னியங்
காவணத்துடையானடியார்களைத்
தீவணத்திருநீறு மெய்பூசியோர்
கோவணத்துடையான் குடமூக்கிலே. 1

பூத்தாடிக்கழியாதேநீர் பூமியீர்
தீத்தாடித் திறஞ்சிந்தையுள்வைம்மினோ
வேர்த்தாடுங்காளிதன் விசைதீர்கென்று
கூத்தாடியுறையுங்குடமூக்கிலே. 2

நங்கையாளுமையாளுறைநாதனார்
அங்கையாளொடறுபதந்தாழ்சடைக்
கங்கையாளவள்கன்னியெனப்படும்
கொங்கையாள் உறையுங்குடமூக்கிலே. 3

ஓதா நாவன் திறத்தையுரைத்திரேல்
ஏதானும்மினிதாகும்மியமுனை
சேதாஏறுடையானமர்ந்தவிடம்
கோதாவிரியுறையுங்குடமூக்கிலே. 4

நக்கரையனை நாடொறும் நன்னெஞ்சே
வக்கரையுறைவானைவணங்குநீ
அக்கரையோடாவரையார்த்தவன்
கொக்கரையுடையான்குடமூக்கிலே. 5

துறவிநெஞ்சினராகிய தொண்டர்காள்
பிறவிநீங்கப்பிதற்றுமின்பித்தராய்
மறவனாய்ப்பார்த்தன்மேற்கணைதொட்டஎங்
குறவனார் உறையுங்குடமூக்கிலே. 6

தொண்டராகித் தொழுதுபணிமினோ
பண்டைவல்வினைபற்றற வேண்டுவீர்
விண்டவர்புரம்மூன்றொருமாத்திரைக்
கொண்டவன்உறையுங்குடமூக்கிலே. 7

காமியஞ்செய்து காலங்கழியாதே
ஓமியஞ்செய்தங்குள்ளத்துணர்மினோ
சாமியோடு சரச்சுவதியவள்
கோமியும்உறையுங்குடமூக்கிலே. 8

சிரமஞ்செய்துசிவனுக்குப்பத்தராய்ப்
பரமனைப்பலநாளும்பயிற்றுமின்
பிரமன்மாலொடுமற்றொழிந்தார்க்கெலாம்
குரவனார் உறையுங்குடமூக்கிலே. 9

அன்றுதானரக்கன் கயிலாயத்தைச்
சென்று தானெடுக்கஉமைஅஞ்சலும்

நன் றுதான் நக்குநல்விர லூன் றிப்பின்
கொன் றுகீதங்கேட்டான்குடமூக்கிலே. 10

- தேவாரம் அடங்கன்முறை 5-22-(1-10)

பதிகக்குறிப்பு: *தொண்டர்காள்; பிறவி நீங்கவேண்டில், பண்டை வினை பற்றற வேண்டில், காமியஞ்செய்து காலங் கழியாதே, ஓமியம் செய்து உள்ளத்து உணர்மின்; பிதற்றுமின்; தொண்டராகித் தொழுது பணிமின்; பூத்தாடிக் கழியாதே, பூவணத்தவன் - அடியார்களை ஆவணத்துடையான் - காளி விசை தீர் கென்று கூத்தாடி- நக்கரையன் - ஆகிய - சிவனைக், கங்கை - யமுனை, கன்னி- சாமி - சரச்சுவதி - கோமி - கோதாவிரி - உறையும் குடமூக்கில் பணிமின்.*

பதிகப் பாட்டுக்குறிப்பு: (1) *பூவணத்தவன் - "பூவண்ணம் பூவின்மணம் போல என்றபடி அருளொடுஎங்கு நிறைந்தவன். பூவணம் என்ற தலத்தில் விளங்குபவன் என்றலுமாம். புண்ணியன் - "புண்ணியப் பொருளாய் நின்றான்" அடியார்களை அங்கு நண்ணி ஆவணத்து உடையான் என்க. "என்றாயோ டென்னப்பனேழேழ் பிறவியும் அன்றே சிவனுக்கெழுதிய ஆவணம்" (திருமந்திரத்தில்). ஆவணம்- ஓலை. இங்கு அடிமை ஓலை குறித்தது. ஆளுடையநம்பிகளைத் தடுத்தாட்கொண்ட சரித வரலாறு காண்க. தீவணத் திருநீறு மெய்பூசி - நீறுபூத்த நெருப்பு. "உலர்ந்த கோமயத்தை வாங்கிச் செக்கரந் தழல்வாய்ப் பெய்து சிவந்திட வெதுப்பி வாங்கி", "இவ்வண்ண மிருக்கு மெங்க ளிறைவண்ண வடிவு மந்தச் செவ்வண்ண மேனி பூத்த திருவெண்ணீறதுவும்" (திருவிளை - புரா - மண்சு* 107-108) *"நீற்றினை யணிந்தது வெனின்னிறைவ னென்றே, சாற்றினை யுயிர்க்கிடர் தணிக்கவென வெண்ணாய்; தோற்றியுள தம்புதல்வர் துன்பமுறும் வெந்நோய், மாற்றும் வகை யன்னைய ரருந்திய மருந்தாம்" (திருவாதவூரர் - புராணம் - புத் - சரு* 76). *ஓர் கோவண - உடையான் - ஒற்றைக் கோவணத்தை உடையாக உடையவன்.* (2) *பூத்தாடி - தோன்றி யழிதலாகிய*

விளையாட்டினைச் செய்து - (3) கங்கை, கன்னி - ஏழு தீர்த்த மாதாக்களில் இருவர். கன்னி. காவிரி - (4) ஓதா நாவன் - ஏனையர் போல ஓதாமல், இயல்பாகவே ஞானங்களை யுணர்ந்தவன். "கல்லாமே கலைஞானங் கற்பித்தான்" தான் பிறரை ஓதாத - துதிக்காத - நாவுடையான் என்றலுமாம். "சேர்ந்தறியாக் கையான்" (திருவா) என்றாற்போல. ஏதானும் இனிதாகும் - ஏதானும் - இனியவல்லவும். - (தீமைதானு - நன்மையாய்ப் பயப்பதே" (மறுமாற்-தாண்.) இயமுனை -கோதாவரி -எழுபெருந்தீர்த்தங்களுள் மற்றும் இருவர். - (8) காமியம்-உலகில் புலன்வழிச் சென்று வேண்டியவற்றையே. ஓமியம் -ஓமகாரியம். ஓமம் புறத்தும் அகத்தும் செய்தல். இது புறம்பே அக்கினி காரியம் செய்யுமுறைப்படி, அகத்தே, குண்டலித் தானமாக உந்தியில் ஞானவனலை எழுப்பி அதனுள் விந்துத்தானத்து அமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடை நாடியாகிய குருக்குச் சுருவங்களால் ஓமித்தல். உள்ளத்துணர்மினோ - உள்ளத்து அருச்சித்துப் புருநடுவிற் றியானித்துப் பூசியுமின் என விரித்துரைத்துக் கொள்க. உள்ளத்து அருச்சித்தலாவது புறத்தே பூசை செய்தல்போல இதய பங்கயத்தில் முதல்வனை, ஐம் பொறியடக்கல் கொல்லாமை பொறை அருள் அறிவு வாய்மை தவம் அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அருச்சித்தலாம். தியானித்தலாவது விந்துத்தானமாகிய புருநடுவிலே ஒளிவடிவாகத் தியானம் செய்தல். ஓமித்தலும் தியானித்தலும் பூசைக்கங்கமாம். இவைபற்றிச் சிவஞான போதம் 9-ஆவது சூத்திரம் "அஞ்செழுத்தால்" என்ற உதாரண வெண்பாவின் கீழ் எமது மாதவச் சிவஞான முனிவருரைத்தலை காண்க. சாமி-சரசுவதி-கோமி-ஏழுபெருந் தீர்த்தங்களுள்வைத்தெண்ணப்படுபவர். (9) சிமம்-வருந்திச் செய்யும் இமய நியம முதலியன.

சி. கே. சுப்பிரமணிய முதலியார்
(திருநாவுக்கரசு நாயனார் புராண உரை
1943 - ஆம் ஆண்டுப் பதிப்பு).

21. காவிரி எங்கள் தாயும் தெய்வமும்

"குடகுமலையின் கண்ணே தோன்றி வான்பொய்க்கிலும் தான் பொய்க்காது பல பூக்களைப் போர்வையாகப் பெற்று இருமருங்கும் தன் அலைகளாகிய கரங்களால் வாரிப் பொன்னையும் மணியையும் கொழிக்கும் புனல்பெருக வரும் காவிரி பாய்தலால் வேலி ஆயிரம் விளைவையுடைத்தாய் வளத்தால் சிறப்புற்று விளங்குவது, இத்தெய்வத் திருக்குடந்தை" எனத் தெய்வீகத் தமிழ்ப் புலவர்களால் பாராட்டப்படுதற்குரியது திருக்குடந்தை. இஃது உண்மையெனினும் விரிவாக நோக்குமிடத்து, தமிழகத்தில் பல மாவட்டங்களைக் காவிரி செழுமையாக்குகிறது.

காவிரி தனது நீர்வளத்தால் தன் இருகரைகளிலும் திருக்கோயில்கள் தோன்ற உதவியுள்ளது. தேவாரப் பாடல்கள் பெற்ற திருக்கோயில்கள் 276. இவற்றுள் காவிரிக்குத் தென்கரையிலுள்ள கோயில்கள் 127. வடகரையிலுள்ள கோயில்கள் 63. இவ்விரு கரைகளிலு முள்ளவை 190. இந்த எண்ணிக்கையின்படி தேவாரப் பாடல்கள் பெற்ற 276 கோயில்களில் பாதிக்கு மேலுள்ள கோயில்கள் காவிரியின் இருகரைகளில் அமைந்தவை.

மகாமக நாளில் யமுனை முதலிய ஒன்பது தீர்த்தங்களும் மகாமகக் குளத்தில் அடைகின்றன என்பது நம்பப்படுகிறது. ஆனால் கண்கூடாகக் காண்பது மகாமகக் குளத்திற்குக் காவிரியின் நீரூற்றுகளிலிருந்தே ஆகும். காவிரி வந்தடைகிற போது மற்றத் தீர்த்தங்கள் நம் கண்ணுக்குக் காணா முறையில் கலந்துகொள்கின்றன. இந்நிலையில் காவிரிக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. இதை மகாமகக் குளத்திற்கு நேரெதிரில் அமைந்துள்ள காசி விசுவநாதர் கோயிலில் வழிபடப்பெறும் கங்கை முதல் உள்ள ஒன்பது தீர்த்தங்களுள் காவிரி மையத்தில் சிறப்பிடம் பெற்று மற்ற எட்டுத் [illegible]த்தங்களுள் நான்கு வலப்புறத்திலும் எஞ்சிய

நான்கு இடப்புறத்திலும் நிலை நாட்டப்பெற்றுள்ளன.

காவிரியில் சென்ற பல ஆண்டுகள் நீர்ப்போக்கின்றி இருந்துவந்தது. இந்த ஆண்டில் பெய்த பெருத்தமழை காரணமாகக் காவிரியில் வெள்ளப்பெருக்கு காணப்பட்டது. காவிரியில் வற்றாத நீரோட்டம் அமைய எத்தனையோ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவற்றோடு இங்குள்ள காசிவிசுவநாதர் கோயிலில் சிறப்பான இடத்தில் எழுந்தருளியுள்ள காவிரிக்கு வழிபாடுகள் முன்னிலும் விட நடத்தப்பட நடவடிக்கை எடுத்தல் பொருத்தமாகும்.

மகாமகத்தின்போது அங்குச் செல்ல இயலாதவர்கள் - மகாமகக் குளத்தில் நீராடிக் குடமூக்கு ஈசுவரரை வழிபட இயலாதவர்கள் பலர் உள்ளார்கள். இவர்கள் மகாமகத்தில் கலந்துகொள்ளும் மக்களின் திரண்ட எண்ணிக்கையை முன்னிட்டோ, முதுமை காரணமாகவோ இளமை காரண மாகவோ மகாமகத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவதில்லை. எனினும், அவர்கள் அப்புனித நாளில் அவரவர் தாம் தாம் இருக்குமிடத்திலேயே மகாமகத்தில் கலந்து கொள்வதாகத் தங்கள் உள்ளங்களைச் சீர்செய்து கொள்ளலாம். குடமூக்குத் தலத்திற்குச் செல்லாமலே குடமூக்கு, குடமூக்கு என வாயாரத் துதிப்போமெனில், அதனால் சிறந்த பயன் பெறலாம் என்பதை.

"குடமூக்கே குடமூக்கே என்பீராகில்
கொடுவினைகள் தீர்ந்தானைக் குறுகலாமே"

எனத் திருநாவுக்கரசு நாயனார் நமக்கு அறிவுறுத்துகிறார்.

அந்நன்னாளில் இத்தகையோர் அவரவர் வாழும் இடங்களில் நீராடக் கோள்ளும் தீர்த்த நீரின் முன் வழிபாடாற்றித் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய இவ்விருவரும் அருளிய குடமூக்குத் தலப்பதிகங்களை ஓதலாம். அடுத்துத் திருநாவுக்கரசு

நாயனார்,

"ஏவியிடர்க்கடலிடைப்பட்டிளைக்கின்றேனை
இப்பிறவியறுத்தேறவாங்கியாங்கே,
கூவிஅமருலகனைத்துமுருவிப் போகக்குறியில்
அறுகுணத்தாண்டுகொண்டார்போலும்
தாவிமுதற்காவிரிநல் யமுனைகங்கை சரசுவதி
பொற்றாமரைபுட் கரணிதெண்ணீர்க்
கோவியொடுகுமரிவருதீர்த் தஞ்சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங்கூத்தனாரே.

என்னும் திருத்தாண்டகத்தைப் பன்முறை ஓதலாம்.

22. கும்பகோணம் நகர்க் கோயில்கள்

1.	கும்பகோணம்	-	முக்தீசுவரர் கோயில்
2.	கும்பகோணம்	-	அம்புஜவல்லிதாயார் மற்றும் வராகப் பெருமாள் கோயில்
3.	கும்பகோணம் பெரியகடைத்தெரு	-	அனுமார் கோயில்
4.	கும்பகோணம் சடச்சாமி மடத்தெரு	-	அனுமார் கோயில்
5.	கும்பகோணம் குச்சிகட்டிச் சந்து	-	அனுமார் கோயில்
6.	கும்பகோணம் ரெட்டிராயர் அக்கிரகாரம்	-	ஆஞ்சநேயசுவாமி கோயில்

7.	கும்பகோணம் புவனேந்திர அக்கிரகாரம்	- ஆஞ்சநேயசுவாமி கோயில்
8.	கும்பகோணம்	- ஆதி கும்பேசுவரர் கோயில்
9.	கும்பகோணம் ஜெகந்நாத பிள்ளையார் கோயில் தெரு	- ஆண்டவ பிள்ளையார் கோயில்
10.	கும்பகோணம்	- ஆயத்துறை விநாயகர் கோயில்
11.	கும்பகோணம்	- இரும்பையாடி தருமராசர் & திரௌபதியம்மன் கோயில்
12.	கும்பகோணம்	- உச்சிப்பிள்ளையார் கோயில்
13.	கும்பகோணம்	- உடையவர் சந்நிதி
14.	கும்பகோணம்	- ஆதிகம்பட்ட விசுவநாதர் கோயில்
15.	கும்பகோணம்	- கரும்பாயிரம் பிள்ளையார் கோயில்
16.	கும்பகோணம் சோலையப்ப முதலி தெரு	- கற்பகவிநாயகர் கோயில்
17.	கும்பகோணம் சோலையப்ப முதலி தெரு	- கன்னிகாபரமேசுவரி கோயில்

18.	கும்பகோணம் சோலையப்ப முதலி தெரு	-	காசிவிசுவநாதர் கோயில்
19.	கும்பகோணம் மடத்துத்தெரு	-	காளஹஸ்தீசுவரர் கோயில்
20.	கும்பகோணம் மடத்துத்தெரு	-	காளியம்மன் கோயில்
21.	கும்பகோணம் மடத்துத்தெரு	-	குமரன் கோயில் மற்றும் சீரட்ட விநாயகர் கோயில்
22.	கும்பகோணம் மடத்துத்தெரு	-	கூத்தாழ்வார் கோயில்
23.	கும்பகோணம் மடத்துத்தெரு	-	கொத்தன் ஒற்றைத்தெரு - கோடியம்மன் & தட்சிணா மூர்த்தி சுவாமி கோயில்
24.	கும்பகோணம் மடத்துத்தெரு	-	கௌதமேசுவரர் கோயில்
25.	கும்பகோணம்	-	சக்கரபாணி கோயில்
26.	கும்பகோணம் மோதிலால் தெரு	-	சஞ்சீவிராயசுவாமி கோயில்
27.	கும்பகோணம் மோதிலால் தெரு	-	சாரங்கபாணி சுவாமி கோயில்
28.	கும்பகோணம் மோதிலால் தெரு	-	சரநாராயணப் பெருமாள் கோயில்

29.	கும்பகோணம் காமாட்சி ஜோதிடம் தெரு	-	சித்தி விநாயகர் கோயில்
30.	கும்பகோணம் டபீர் குளம் படித்துறை	-	சித்திவிநாயகர் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்
31.	கும்பகோணம் கொத்தன் ஒத்தைத்தெரு	-	சுந்தரமூர்த்தி விநாயகர் கோயில்
32	கும்பகோணம் தஞ்சை நாயகிபுரம்	-	சுந்தரமூர்த்தி விநாயகர் கோயில்
33.	கும்பகோணம் செக்கடி	-	சுப்பிரமணியசுவாமி என்கிற பழனியாண்டவர் கோயில்
34.	கும்பகோணம் பானாத்துறைத்தெரு	-	சோமநாதர் கோயில்
35.	கும்பகோணம் பானாத்துறைத்தெரு	-	சோமேசுவரர் கோயில்
36.	கும்பகோணம் பானாத்துறைத்தெரு	-	சோமமேசுவரர் கோயில்
37.	கும்பகோணம் நாணயக்காரத்தெரு	-	நினைத்த காரியம் முடித்தவிநாயகர் கோயில்
38.	கும்பகோணம் தைக்கால் மதகடித்தெரு	-	திரௌபதையம்மன் கோயில்

39.	கும்பகோணம் வட்டிப்பிள்ளையார் தெரு	வட்டிப்பிள்ளையார் கோயில்
40.	கும்பகோணம் செட்டிப்படித்துறை	விசுவநாதசுவாமி கோயில்
41.	கும்பகோணம் மேட்டுத்தெரு	விசுவநாதசுவாமி கோயில்
42.	கும்பகோணம் வினைதீர்த்த செட்டி அக்கிரகாரம்	விசுவநாதசாமி மற்றும் ராஜேந்திரபிள்ளையார் கோயில்
43.	கும்பகோணம் ஆண்டியப்ப முதலி தெரு	பிரளயம் காத்த விநாயகர் கோயில்
44.	கும்பகோணம் டபீர்தெரு	ஜெகந்நாத பிள்ளையார் கோயில்
45.	கும்பகோணம் எல்லையம்மன் கோயில் தெரு	திரெளபதியம்மன் மற்றும் எல்லையம்மன் கோயில்கள்
46.	கும்பகோணம் சக்கரபாணிகோயில் கீழ்வீதி	திரெளபதியம்மன் கோயில்
47.	கும்பகோணம் சக்[illegible]ாணி கோயில் [illegible]ழவீதி	பகவத் விநாயகர் கோயில்

48.	கும்பகோணம் வெங்கடேச அக்கிரகாரம்	- பட்டாபிராமசாமி கோயில்
49.	கும்பகோணம் வெங்கடேச அக்கிரகாரம்	- படைவெட்டி மாரியம்மன் கோயில்
50.	கும்பகோணம் முதப்பிள்ளைமண்டபம் திருநாகேசுவரர்	- பாடகச்சேரி இராமலிங்கசாமி கோயில
51.	கும்பகோணம் முதப்பிள்ளைமண்டபம் திருநாகேசுவரர்	- பாண்டுரங்கசாமி கோயில்
52.	கும்பகோணம் காவேரிக்கரைத் தெரு	- பிரசன்ன வெங்கடாசலபதி கோயில்
53.	கும்பகோணம் காவேரிக்கரைத் தெரு	- பொய்யாத பிள்ளையார் கோயில்
54.	கும்பகோணம் பெசண்ட் ரோடு	- மன்னார்சாமி கோயில்
55.	கும்பகோணம் பக்தபுரி அக்கிரகாரம்	- மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்
56.	கும்பகோணம் நாகேசுவரர் தெற்குவீதி	- முச்சந்திபாதாள காளியம்மன் கோயில்
57	கும்பகோணம் நாகேசுவரர் தெற்குவீதி	- யானை அடி அய்யனார் கோயில்

58.	கும்பகோணம் தோப்புத் தெரு	- இராஜகோபாலசுவாமி கோயில்
59.	கும்பகோணம் சாரங்கபாணி மேல சந்நிதித்தெரு	- ஏகதயோகீந்தர சுவாமிகள் கோயில்

மலைதோன்றி மண்தோன்றாக் காலத்தே
நிலை பெற்றுப் புகழ்பூத்த

பண்டைய

தமிழர்தம் தாய்மொழி இயலை
தமிழர்தம் பண்பாட்டு வளத்தை
தமிழர்தம் கலைவள நலத்தை
தமிழர்தம் நாட்டுவள மேம்பாட்டை
தமிழர்தம் இலக்கண, இலக்கியச் சிறப்பை
தெளிந்து ஆய்ந்து தெளிவுபெறக்கூறும்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள்

அறிவியல் களஞ்சியங்கள்
வாழ்வியல் களஞ்சியங்கள்
பெருஞ்சொல் அகராதிகள்
கோயில் களஞ்சியங்கள்

போன்ற இருநூறுக்கும் மேற்பட்ட நூல்கள்,

கற்றவர் போற்றும் மற்றவர் புகழும்
கருத்துக் கருவூலங்கள்;
கனிச்சுவை தருவன.
வாங்கிப் படித்தீர்களா?

விவரங்களுக்கும் விலைப்பட்டியலுக்கும் எழுதுக.

உதவி இயக்குநர்
பதிப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005.